ஜநவிநோதிநி.

இல. 4, 5.] {ஏப்பிரல்மீ மேமீ} 1883. [புஸ்த. XIV.

மாட்சிமைதங்கிய பிரின்ஸ் அவ் உவேல்ஸ்

என்னும்

இளவரசர்.

மாட்சிமைதங்கிய நம்மகாராணியாருடைய மூத்தகுமாரரும் அவர்க்குப்பிறகு இந்த ராஜ்யத்தில் பட்டந்தரிப்பதற்குரிய நம் இளவரசருமாகிய பிரின்ஸ் அவ் உவேல்ஸ் பிரபு அவர்கள் சிலவருஷங்களுக்குமுன்னே இவ்விந்துதேசயாத்திரை வந்திருந்தபோது, இத்தேசத்திலுள்ள பலவிதமான புதுமைகளையும் இவ்விடத்து ஜனங்களுடைய ராஜபக்திமுதலிய குணாதிசயங்களையும் கண்டு களிகூர்ந்து சென்றாரல்லவா. அந்தப் பிரபு, இவ்விடத்துக்கு வந்து பார்ப்பதற்கு அனுகூலப்படாத அங்கிலேயர்களும் இத்தேசத்து நிலைமுதலானவைகளைச் சுலபமாய்க் கற்றுத் தெரிந்துகொள்ளும்படியாகவும், ஸங்கீதவித்தையில் தேர்ச்சிபெறும்படியாகவும், இத்தேசத்திலிருந்து போகின்றவர்களுக்கு இங்கிலாந்தில் சவுக்கியமான வஸதியுண்டாகும்படியாகவும் ஜனோபகாரமான பல ஏற்பாடுகள் செய்வதோடு பிறர்செய்கின்ற ஏற்பாடுகளை ஆமோதித்தும்வருகிறார். அவைகளுள் சிலவற்றை அடியில் எடுத்துக்காட்டுவோம்.

முன் நமது தேசத்துக் கவர்னர்ஜனரலாயிருந்த நார்த்துப்ரூக் பிரபு அவர்கள், சட்டபரீக்ஷைகளுக்காகவும், ஸிவில் ஸெர்விஸ் உத்தியோக பரீக்ஷைக்காகவும் இவ்விந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் போகின்றவர்களுக்கு அவ்விடத்தில் சுகமான வஸதிக்கு ஏற்றதாய் ஒரு சாலை ஸ்தாபித்திருக்கிறார். அந்தச் சாலையை ஸ்தாபித்து அதில் கிரகப்பிரவேசம் செய்யும்போது நம்மிளவரசர் அதற்குத் தாம் முதன்மையாக வந்திருந்து கோரினகாரியத்தைச் சிறப்பாக நடப்பித்து, முன் தாம் இந்துதேசயாத்திரையாய் வந்திருந்தகாலத்தில் இத்தேசத்தார் தம்மை நன்குவரப்பெற்றுத் தமக்குச் செய்த பல

விதமான உபசாரங்களால் அவர்களுடைய யோக்கியதைகளைத் தாம் நன்றாய் அறிந்திருப்பதாகவும், அப்படிப்பட்ட இந்துதேசத்தார்க்கு உபகாரமாக எவ்விதமான செய்கைசெய்தாலும் தமக்குப் பரமாநந்தமென்பதாகவும் ஒரு உபந்நியாஸம் செய்தார்.

இரண்டாவது, ஐரோப்பாவில் மற்றத் தேசத்தாரைப்போலவும், இவ்விந்துதேசத்தாரைப்போலவும் அங்கிலேயர்களும் ஸங்கீதவித்தையில் மிகத் தேர்ச்சிபெறவேண்டுமெனக் கருதி அவர்கள் கற்றுத் தேறுவதற்காக ஸங்கீதவித்தியாசாலை ஒன்று ஸ்தாபித்து, நாளது மேமீ நம்மிளவரசர் தம்மனையாட்டியோடுகூடப் பின்னும் பல ராஜவமிசத்தாரும் மந்திரிமுதலானோர்களும் பின்தொடரப் போய், அந்த வித்தியாசாலையில் வெகு வைபவமாய் நூதன கிரகப்பிரவேசம் செய்தார். அக்காலத்தில் பிரபுக்கள் அநேகர் அவ்விடத்திற்கு வந்தார்கள். அதற்குமுன் அந்த விஷயத்தைப்பற்றிப் பேசுவதற்காக நாற்பத்துநான்குதரம் சபைகூடி 11,00,000 ரூபாய் சேர்க்கப்பட்டது. இதில் 50,000 ரூபாய் இளவரசருடைய மனையாட்டியின் நன்கொடையானது. அவ்விடத்திலேயே வித்தியார்த்திவேதனம் நான்கும், ஆஸ்திரேலியாவில் இரண்டும் ஏற்பட்டன. இதுவரையில் சேர்ந்த தொகை உத்தேசித்தப்படி அந்த வித்தியாசாலையின் வியாபாரத்தை முற்றும் நிறைவேற்றப் போதாததேயாயினும், தற்காலத்தில் காரியம் ஆரம்பிக்கப் போதுமானதாயிருந்தது. 1,588 வித்தியார்த்திகள் அந்த ஸங்கீதவித்தியாசாலையில் சேர விண்ணப்பம் செய்துகொண்டார்கள். அவர்களுள் 480பேர் பரீக்ஷைக்கு அனுப்பப்பட்டார்கள்.

இந்த ஸங்கீத வித்தியாசாலைப் பிரவேசம் செய்தபோது நம்மிளவரசர், மேல்படி வித்தியாசாலை விருத்தியாகிற விஷயத்தில் தமக்கு மிகுந்த சந்தோஷமென்பதாகவும், அவ்விஷயத்தில் தாம் மிகுந்த ஊக்கம் கொண்டிருப்பதாகவும் தம் உட்கருத்தை வெளிப்படுத்தினார்; தம்முடைய ராஜ்யத்துப் பிரஜைகளிடத்தில் தமக்குள்ள அபிமானம் இத்தன்மையதென்பதைத் தெளியக்காட்டினார். அதற்கு உபகரிக்கச் சக்தியுள்ளவர்கள் அங்கிலேயராஜ்யத்துக்கு உட்பட்டவர்களுள் எந்தஜாதியாரானாலும் இளவரசர்கேட்டு மறுத்து உரைத்தவர் ஒருவருமில்லை. இந்த வித்தியாசாலை வெகுசீக்கிரத்தில் மற்றத்தேசங்களிலுள்ள ஸங்கீதவித்தியாசாலைகளைப்போலவே மிகப் பிரசித்திபெற்றதாகி, மற்றத்தேசத்து ஜனங்களைப்போலவே இங்கிலாந்து தேசத்தாரும் ஸங்கீதசாஸ்திர நிபுணரென்று வழங்கப்படுவார்களென்பதற்குத் தடையில்லை. ஸங்கீதசாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்ற எல்லாத் தேசங்களிலும் அது முதன்மையான ஸ்தானமாயிருக்கவேண்டுமென அவர்கள் ஆவல்கொண்டிருக்கிறார்கள். நம் மகாராணியார் தமக்கு அந்த வித்தியாசாலையினிடத்திலுள்ள அபிமானத்

துக்கு ஒரு அறிகுறியாய் அதற்கு உபாத்தியாயராக நியமிக்கப்பட்ட இரண்டு ஸங்கீதசாஸ்திர பண்டிதர்களுக்குப் பிரதான மந்திரியினுடைய அறிக்கையின்மேல் நைட் என்ற பட்டப்பெயர் அளித்தனர். அந்த வித்தியாசாலையின் முக்கியாதிகாரியான டாக்ட்டர் க்ரோவ் என்பவர்க்கும் அதே பட்டப்பெயர் அளிக்கப்பட்டது.

மூன்றாவது, மானியர்வில்லியம்ஸ் ஆக்ஸ்போர்ட் நகரத்தில் ஸ்தாபிக்கப் புகுந்த இந்துதேச பாஷாவேஷ மதாசாரம் முதலானவைகளைக் கற்பிக்கும் கல்விச்சாலைக் கட்டடத்துக்கு நாளது மேமீ 2௳ அஸ்திவாரம் போட்டார். அந்தச் சாலை ஸ்தாபிப்பதற்குக் கருத்தென்னவெனின், இவ்விந்துதேச ஸம்பந்தமாயும் இத்தேசத்துப் பிரஜைகளின் ஸம்பந்தமாயுமுள்ள பற்பல விஷயங்களையும் அத்தேசத்தார்க்கு நன்றாய்த் தெளிவாகக் கற்பிக்கவேண்டுமென்பதும், இத்தேசத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்யவேண்டுமென்ற விருப்பத்தை அவர்களுக்கு மேன்மேலும் அதிகரிக்கச் செய்யவேண்டுமென்பதும், இவ்விந்தியாவைப்பற்றிய தப்பெண்ணங்களை மாற்றி உண்மையான அபிப்பிராயம் உண்டாக்கவேண்டுமென்பதுமாகிய இவைகளாம். அவ்விடத்தில் மந்திரிமுதலிய ராஜாங்க உத்தியோகஸ்தர், வித்தியாசாலைத் தலைவர் முதலான பல பிரபுக்கள் முன்னமே வந்து கூடியிருந்தனர். அவ்விடத்துக்கு இளவரசான பிரின்ஸ் அவ் உவேல்ஸ் வந்தவுடன் அவர்களெல்லாரும் வெகு ஆவலோடு அவரை வரவழைத்து அவரைக்கொண்டு அந்தக் கட்டடத்துக்கு அஸ்திவாரமாய் ஒரு கல் நாட்டுவித்தார்கள். அதில், "இந்தக் கல் 1883-௵ மேமீ 2௳ மாட்சிமைதங்கின பிரின்ஸ் அவ் உவேல்ஸ் அவர்கள் ஸ்தாபித்தது" என்னும் கருத்துள்ள சொற்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பிறகு வைதிகச்சடங்குகள் சில நடத்தப்பட்டன. அநேகர்க்கு விருந்தளித்தார்கள். பின்பு இளவரசர் அந்த நற்காரியம் செய்வதில் தமக்கு உண்டான ஆநந்தமும் அதனால் தமது தேசத்து ஜனங்கள் விசேஷமாக விருத்தியடைவதில் தமக்கு உண்டாகும் பெருமையும் விளங்கும்படியாக உபந்நியஸித்தார். அதை அனுமோதித்து மற்றப் பிரபுக்களும் சிலர் உபந்நியஸித்தார்கள்.

அந்தத் தருமசாலையைக் கட்டுவிக்க முயன்றவரான மானியர் வில்லியம்ஸ் பண்டிதர் பிறகு எழுந்து, தமக்கு அந்தக் காரியவிஷயத்தில் பற்பல பிரபுக்களால் கிடைத்த பேருதவிகளை எடுத்துச் சொல்லி, ஆதிசேஷனைப்போலத் தமக்கு ஆயிரம்முகம் கிடைத்தாலும் அந்த மகோபகாரிகள் விஷயத்தில் தமக்குள்ள நன்றி இத்தன்மையதென்று எடுத்துரைக்க முடியாதென்று மொழிந்தார். அப்பொழுது அவர் 450 பெயர் அடங்கிய கையொப்பப் பட்டியொன்றைக் கையில் வைத்திருந்தார். அந்தப் பட்டியில் மகாராணியாருடைய பெயரும், அன்றையதினம் அங்கு வந்திருந்து மேன்மையாக அம்

மகோற்சவத்தை நடப்பித்த இளவரசருடைய பெயரும் முதல்வரிகளாயிருந்தன. பல அங்கிலேய பிரபுக்கள்மாத்திரமேயன்றி, ஹைதராபாத்து நிஜாம், காச்மீரதேசத்து மகாராஜா, பரோதா மகாராஜா முதலான இந்துதேசத்து மகாராஜாக்களும் மகாராணிகளும் இன்னும் அநேகம் பிரபுக்களும் அதற்கு விசேஷமாக உபகரித்தார்களென்பதையும் எடுத்துரைத்தார்.

இவ்விளவரசர் கிரீக், லத்தின் பாஷைகளில் பண்டிதராயிருப்பதோடுகூட, பிரான்சு, ஜர்மனியா, ஸ்பானியா, இத்தாலியா இத்தேச பாஷைகளைத் தடையின்றி ஒழுங்காய்ப் பேசக் கற்றிருக்கிறார். சிற்ப சித்திர கீத வாத்தியம் முதலியவைகளிலும் சட்டங்களிலும் செம்மையாகப் பயின்றிருக்கிறார்; ராணுவவீரர் தொழிலில் பழகாவிட்டாலும் யுத்தசாஸ்திரத்தை நன்றாய்க் கற்றுணர்ந்திருக்கிறார். இவர் குதிரையேறிச் செலுத்துவதில் மிகவும் வல்லவர். குதிரைமேல் ஏறியிருக்கும்போது, மதிட்சுவர்களாகட்டும் வாய்க்கால் முதலியவையாகட்டும், ஒன்றும் இவர்க்கு லக்ஷியமன்று. அரசாட்சியின் ஸம்பந்தமான காரியங்களைப் பார்ப்பதற்குமட்டும் இவ்விளவரசர்க்குச் சுதந்தரமில்லையாயினும், தமது தாயாகிய மகாராணியார் அரண்மனையில் செய்யவேண்டிய மரியாதை விருந்துமுதலான மற்ற ராஜகாரியங்களைச் செய்ய இவர்க்குப் பொழுது சரியாயிருக்கின்றது: தேசாந்தரங்களிலிருந்து ராஜாக்களும் ஸ்தானபதிகளும் வந்தால் அவர்களை வரவழைத்து, மகாராணியார்க்கு அனுகூலப்படாதபோது, அவர்களுக்குத் தக்கபடி மரியாதைசெய்ய வேண்டியதும், வேண்டியவர்களை வரவழைத்து விருந்தளிப்பது முதலிய காரியங்கள் செய்யவேண்டியதும், பலவிதமான ஸபைகளுக்கு அத்தியக்ஷராய்ப் போயிருக்கவேண்டியதும் இவ்விளவரசருடைய காரியமே. குடும்பதருமங்கள் கோமக்களிடத்திலும் காணப்படுவதுண்டு, எல்லாச் செல்வமும் அமைந்த ராஜகிரகத்தில் குடும்பதருமங்களும் அமைந்திருக்குமாயின் பொன்மலர்க்குப் பரிமளம் உண்டானதுபோலாமென்பதை நிதர்சனமாய் நடத்திக்காட்ட வேண்டியதும் நம்மிளவரசருடைய காரியமே. இப்படித் தமது குமாரருதவியுடன் ராஜகாரியங்களை வெகு சீர்மையாகப் பரிபாலித்து வருகின்ற மகாராணியாருடைய நற்குணங்கள் எல்லாப் பிரஜைகளுக்கும் தெளிவாய்த் தெரிந்திருப்பதால், இவ்வங்கிலேய ராஜவமிசத்தாருடைய நல்லொழுக்கங்களே அத்தேசத்தாரை நீதிநெறிகளில் செலுத்துவதற்கு மேல்வரிச்சட்டமாகி, அந்த ராஜ்யத்தைப்போல தருமராஜ்யம் வேறொன்றும் இல்லையென எல்லோரும் கொண்டாடுவதற்கு முதற்காரணமாய் இருக்கின்றன.

நம்மிளவரசருடைய சரித்திரவரலாறுகளை முன்னொருதடவையில் எடுத்து எழுதியிருக்கிறோமாகையால், மறுபடியும் அதை முழு

வதும் சொல்வது மொழிந்தது மொழிதலாகும் என்று கருதி அவற்றை இங்கு எழுதவில்லை. இப்போது வயது முதிர்ந்த மகாராணியார்க்குப் பதிலாக மேலேசொல்லிய உபகாரமான பற்பல நற்காரியங்கள் நடத்துவதற்குத் தலைவராயிருந்து ராஜவமிசத்தாருக்குரிய உத்தமகுணங்கள் தம்மிடத்தில் இயற்கையாகவே குடிகொண்டிருக்கின்றனவென்பதை இவர் விளங்கச்செய்துவருவதால், அவ்வுத்தம குணங்களுள் சிலவற்றைமாத்திரம் ஒருவாறு எடுத்து எழுதி இவருடைய வடிவழகை விளக்குகின்ற ஒரு படத்தையும் இச்சஞ்சிகையுடன் சேர்த்திருக்கிறோம்.

உவில்லியம் ஹெர்ஷல் எனும் வானசாஸ்திரியும் அவருடைய சகோதரியும்.

முன் சஞ்சிகையில் பூர்வகாலத்து வானசாஸ்திரியான நியூட்டனென்பவரைப்பற்றி ஒருவாறு எழுதினோமே. அவர்க்குப் பிறகு சில காலத்திற்குமுன் தோன்றியவரான உவில்லியம் ஹெர்ஷல் என்ற சோதிடசாஸ்திரியைப் பற்றி இச்சஞ்சிகையில் சிறிது எழுதுகிறோம்.

ஏறக்குறைய 130-வருஷங்களுக்குமுன் ஐரோப்பாவிலே ஜர்மானியாதேசத்துக்கு வடக்கில் ஹானோவர் நகரத்திலே ஒரு பெண் பிறந்தாள். அவள் தன் பெற்றோர்களுக்கு எட்டாவது குழந்தையாயும் இரண்டாவது பெண்குழந்தையாயும் இருந்ததுபற்றி அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்கூட அவளுடைய பிறப்பை அப்பொழுது ஒரு சிறப்பாகக் கவனிக்கவில்லை. ஆயினும் இப்போது நூறுவருஷங்களுக்கு மேலானபிறகு எல்லோரும் அந்தப் பெண்ணினுடைய சாமர்த்தியங்களைக் கண்டு ஆச்சரியமடைந்தவர்களாகி அவளுடைய சரித்திரங்களைக் கேட்க மிக்க ஆவல்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சிறுமிக்குக் கெரோலியன் ஹெர்ஷல் என்று பெயர். அவளுடைய தந்தை பட்டாளத்தில் வாத்தியம் வாசிப்பவர். மேலும் ஸங்கீதப்பயிற்சி செய்விப்பவர். அவளுடைய சகோதரர்களும் பாடகர்களாய் இருந்தார்கள்.

மற்றப் பிள்ளைகளைப்போலவே இந்தப் பெண்ணையும் போர்ச் சேவகர்களுடைய பாடசாலையில் படிக்கும்படி அனுப்பினார்கள். அந்தப் பெண்ணுக்கு உயர்ந்தவகுப்புக் கல்வி கற்பிக்கவேண்டும் என்பது அவள் தந்தையினுடைய அபிப்பிராயம். ஆயினும் அது தாய்க்குச் சம்மதமில்லை; பெண்களுக்கு அவ்வளவு அதிகமான

படிப்பு அவசியமில்லையென்றுசொல்லித் தாய், பள்ளிக்கூடத்தில் படித்து ஒழிந்தவேளைகளில் பெண்ணைத் தையல் முதலிய அவசிய மான வேலைகள் கற்றுக்கொள்ளும்படித் திட்டம்செய்தாள். சீக்கி ரமே தையல்வேலையை நன்ருய்க் கற்றுக்கொண்டு அச்சிறுமி வீட்டில் தன் சகோதரர் முதலியவர்களுக்கு உடைதைப்பது முதலான வேலை களைத் தானே செய்துவந்தாள். மிகச் சிறுபிராயத்திலேயே அவள் பின்னல்வேலைகளையும் நன்ருய்க் கற்றுக்கொண்டாள்.

இப்படி அம்மகள் அவசியமான பல வீட்டுவேலைகளைச் சந்தோ ஷமாய்ச் செய்துவருகையிலும் ஒழிந்தவேளைகளில் சும்மாஇராமல் பின்னும் பலவிஷயங்களில் தேர்ச்சிபெற்றுவந்தாள். தந்தை அவ ளுக்கு வீணைமுதலிய வாத்தியம் வாசிக்கக் கற்றுக்கொடுத்தார். அவர் ஏதாவது வாத்தியம் வாசித்துக்கொண்டிருக்கும்பொழுது இம்மகள் அந்தக் கூட்டத்திற்சேர்ந்த பாடகர்களுள் தானும் ஒருத்தி யாயிருந்தாலும் இருப்பாள்; அல்லது தனியே ஒருபுறமாயிருந்து தையல் முதலான தன் வேலையைச் செய்துகொண்டு அதை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தாலும் இருப்பாள். இப்படியிருக்க அவளு டைய பதினேழாவது வயதில் தந்தை இறந்துபோனுர். பிறகு இரண் டொரு வருஷத்திற்குள் அவளுடைய நிலை வெகுவாக மாறுபட்டுப் போயிற்று.

அவளுடைய சகோதரர்களுள் ஒருவரான உவில்லியம் ஹெர் ஷல் என்பவர் இதற்குப் பலவருஷங்கள்முன்னமே இங்கிலாந்துக் குப் போய் அங்கே பாத்து என்னும் நகரத்தில் நிலையாக வசதியேற் படுத்திக்கொண்டு அவ்விடத்தில் ஒரு கோயிலுக்குச் சங்கீதவாத்தி யக்காரனுயிருந்தார். ஆயினும் அவர்க்கு எப்போதும் தன் அரு மைத் தங்கையினுடைய ஞாபகம் இருதயத்தில் இருந்துகொண்டே யிருந்தது. தகப்பனுர் இறந்துபோன சில வருஷங்களுக்குப்பின் தங்கை தனக்கு வாத்தியத்தொழிலில் விசேஷமாய் உதவிசெய்வாள் எனக் கருதி அவளைத் தானிருக்கும் இடத்திற்கு வரும்படிச் செய்தி சொல்லியனுப்ப, அவள் அவருடைய வேண்டுகோளைச் சந்தோஷ மாகவே அங்கிகரித்து பாத்து நகரம்போய்ச் சேர்ந்து, அங்கேயும் நிமிஷங்கூடச் சும்மாஇராமல் ஒழிந்தவேளைகளில் அங்கிலேய பாஷை கற்பதும், ஸங்கீத சாஸ்திரப்பயிற்சியை மேன்மேலும் விருத் திபண்ணுவதுமாயிருந்து, வரவர அவைகளில் மிகத் தேர்ச்சி பெற்ருள். பிறகு அவளுடைய யோக்கியதைகளைச் சபையில் காட் டும்படி நேர்ந்தபோது, இங்கிலீஷ் பாஷையிலும் ஸங்கீதத்திலும் அவள் பெற்ற திறமையைக் கண்டு யாவரும் அவளை மிகவும் கொண் டாடினுர்கள்.

ஆயினும் அப்பெருமாட்டிக்கு உண்டான புகழ்ச்சி இதனுலே மாத்திரமல்ல; மற்ருெரு அருமையான விஷயத்தில் விசேஷமான

தேர்ச்சி பெற்றதனுலேயேயாம். ஸங்கீதத்தில் பிரசித்திபெற்ற பெண்கள் பலர் இருக்கின்றனர்; ஆயினும் இந்த அருமையான துறையில் தேர்ச்சிபெற்றவர் அதிகமில்லை.

அவளுடைய சகோதரரான உவில்லியம் ஹெர்ஷலுக்கு வானசாஸ்திரத்தில் எப்போதும் விருப்பம் அதிகம். ஆதலால் ஒழிந்தவேளைகளில் அவர் விசேஷமாய் வானசாஸ்திரப்பயிற்சியிலேயே பொழுதுபோக்கிவந்தார். அவ்வளவுமாத்திரத்திலும் நிற்கவில்லை; வரவரத் தம்முடைய காலம் முழுமையும் வானசாஸ்திரவிஷயத்திலேயே செலவழிக்கலானுர். அப்படியிருக்க 3-வது ஜார்ஜ் என்னும் அரசனுடைய அபிமானம் கிடைக்கவே அவருடைய சகாயத்தைக்கொண்டு, விண்ட்ஸர் கோட்டைக்கு அருகாமையில் போய்ச் சேர்ந்து, அங்கே அவர் ஏற்படுத்திய சொற்பவேதனத்தால் ஜீவித்துக்கொண்டு தாம் கருத்திற்கொண்ட விஷயத்திலேயே கண்ணுயிருந்தார். நாற்பதுவருஷகாலம் சோதிஷசாஸ்திரப் பரீக்ஷைசெய்து, வானத்திலுள்ள நக்ஷத்திரங்கள் கிரகங்கள் இவைகளுடைய தன்மையைப் பற்றி ஆராய்ச்சிசெய்துகொண்டுவந்தார். அக்காலத்தில் வானசாஸ்திரவிஷயங்களைப் பரீக்ஷைசெய்து அனுபவத்திற்கண்ட ஜோதிஷசாஸ்திரிகளுள் முதன்மையானவர் இவரே.

ஹெர்ஷலுடைய காலத்திற்கு முன்வரையில் ஐரோப்பிய ஜோதிடசாஸ்திரிகளும் மற்றவர்களும், சூரியனைச் சுற்றியோடுகின்ற பல கிரகங்களுள் கடைசியாய் அதிக உயரத்திலிருப்பது சனிக்கிரகமே; அதற்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் குறைந்தது 87 கோடி மைலென்றும், அதற்கப்பால் கிரகங்கள் இல்லையென்றும் நினைத்திருந்தார்கள். சிலர்மாத்திரம் அதற்கப்பாலும் சில கிரகங்கள் இருக்கவேண்டுமென்றும், இப்பூமியிலிருந்து அதிக தூரத்திலிருப்பதனுலேயே அவை புலப்படவில்லையென்றும் ஊகித்திருந்தார்களாயினும் வாஸ்தவம் இப்படிப்பட்டதென்று எவரும் கண்டுபிடிக்கவில்லை. பதினேழாவது நூற்றுண்டின் துவக்கத்தில் தூரதிருஷ்டிக் கண்ணுடி கண்டுபிடித்துக் ககோளபரிசோதனை செய்தபோதே புதிய கிரகங்களும் இருக்கின்றனவென்ற விஷயமும் கண்டுபிடிக்கப்பட்டிருக்குமாயினும், சனி பிரகஸ்பதி முதலிய மற்றக் கிரகங்களுக்கு இருப்பதுபோல அதற்கு உபக்கிரகமொன்றும் புலப்படவில்லையாதலால், சனிக்கு அப்பால் கிரகமில்லையெனவே நிச்சயித்திருந்தார்கள். அப்படியிருக்க 1781-ஆு பாத்துநகரத்தில் இந்த ஹெர்ஷல் தானே சுதந்தரமாய்த் தூரதிருஷ்டிக்கண்ணுடியொன்று செய்துகொண்டு அதன்மூலமாய் நக்ஷத்திரமண்டலத்தைப் பரிசோதனைசெய்து வானத்தில் நெடுந்தூரத்துக்கப்பால் புதிய நக்ஷத்திரமொன்று இருக்கக்கண்டார். பிறகு பின்னும் பலநாள் அதை உற்றுப்பார்த்து, அது சனிக்குமேலே அதற்கு இரட்டத்தனைதூரம் அப்பால் சூரியனைச் சுற்றி

ஓடுகிற ஒரு சிறந்த கிரகமென்று நிச்சயிக்கலாயிற்று. அப்புறம் பல சோதிடசாஸ்திரிகள் அவர் கண்டுபிடித்த விஷயத்தைக்கேட்டு ஆமோதித்துத் தாமும் அவர்க்குத் துணையாய் நின்று ஆராய்ச்சி செய்தார்கள். அவர் கண்டுபிடித்த கிரகத்திற்கு யுரானஸ் என்று பெயரளிக்கப்பட்டது. பிறகு ஹெர்ஷல் அந்தக் கிரகத்திற்குப் பல உபக்கிரகங்களையும் கண்டுபிடித்தார். அப்புறம் அதற்குமேல் நெப்தூன் என்று ஒரு கிரகம் இருப்பதாகக் கண்டுபிடித்துப் பின்னும் பல புதிய ஆராய்ச்சிகள் செய்துவருகிறார்களாயினும் முதலில் இவைகளுக்கு ஏற்ற வழி காட்டினவர் ஹெர்ஷலேயாம்.

இவ்வண்ணம் அவர் சோதிடசாஸ்திரப்பயிற்சி செய்துகொண்டிருந்தகாலம் முழுதும் அவருடைய சகோதரியான கெரோலியன் அவர்க்கு உதவிசெய்துவந்தாள். ஒரு சமயத்தில் அவர் நிமிஷங்கூட ஓய்ச்சலொழிவின்றி நக்ஷத்திரமண்டல சோதனையில் இருந்ததாகவும், அக்காலத்தில் ஒருவேளை அவருடைய பிராணன் போய்விடப்போகிறதேயென்று தானே அவர்க்கு வாயில் ஆகாரம்போட்டுக் காப்பாற்றியதாகவும் அவளே சொல்லியிருக்கிறாள். ஒருதடவையில் பெரிய ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடியின் ஓர் பாகத்தைச் செய்து முடிக்கும்பொருட்டுப் பதினாறு மணிநேரம் தன் கையை அவர் அதைவிட்டு வாங்கவேயில்லையாம். அப்படிப்பட்ட காலங்களில் அவளுடைய பேருதவியில்லாவிட்டால் அவர் பிழைத்தேயிருக்கமாட்டார். வானசாஸ்திர சோதனையில் கணிதவிஷயங்கள் பலவாய் வருமல்லவா? இவ்விஷயத்தில் கெரோலியன் அவர்க்குச் செய்த உதவி இவ்வளவவ்வளவன்று. தாம் சோதனைசெய்த விஷயங்களைப்பற்றி அப்போதைக்கப்போது அவர் எழுதிவைத்தவைகளுக்குச் சுத்தப்பிரதிசெய்வது முதலான வியாபாரங்களும் அவளே செய்துவந்தாள். இவைமாத்திரமேயல்ல, தனக்கென்று தன் சகோதரர் செய்துகொடுத்த தூரதிருஷ்டிக்கண்ணாடியைக்கொண்டு நக்ஷத்திரமண்டலத்தில் பல பரிசோதனைகள் செய்து அதன் மூலமாயும் உபகரித்தாள். அவள் தன் கண்ணாடியைக்கொண்டு பலதடவைகளில் பார்த்துப் புதுமையாய் ஏழு வால்நக்ஷத்திரங்களைக் கண்டுபிடித்தாள்.

இப்படியிருக்க உவில்லியம் 1822-ஆ இறந்துபோகவே கெரோலியன் இங்கிலாந்தைவிட்டுச் சுதேசத்துக்குத் திரும்பிப் போய்விடும்படி நேரிட்டது. அப்போது அவளுக்கு வயது எழுபத்திரண்டாயிருந்தும் அக்காலத்திலும் சும்மாஇராமல் படிப்பிலேயே நோக்கங்கொண்டிருந்தாள். 1828-ஆத்தில் ராஜகீய ஜோதிஷசபையார் அவள் ஜோதிஷசாஸ்திரவிஷயத்தில் செய்த நன்மைகளுக்கு அறிகுறியாய் ஒரு பொற்பதக்கமளித்து அந்தச் சபைக்கு அவளை ஒரு உபகார அத்தியக்ஷராகச் சேர்த்துக்கொண்டார்கள். இப்படிப்பட்ட அரு

மையான பெருமைகள் ஸ்திரீகளுக்கு ஒருபோதும் கிடைக்கத்தக்கவையல்ல. அவளுடைய பெருமைகளையும் திறமைகளையும் செம்மையாய் எடுத்துரைக்க நம்மால் முடியாதாயினும், அவளுக்குப் பொற்பதக்க மளித்தகாலத்தில் அவளுடைய பெருமைகளைப்பற்றி ஒருவர் எடுத்துச்சொல்லிய விஷயங்களை அடியிற் குறிக்கின்றோம். அவர் சொன்னதாவது:-"உவில்லியம் ஹெர்ஷலோடுகூடப் பாடுபட்டது யார்? அவரோடுகூடவே காற்றுமழையென்று பாராமல் எப்போதும் வெளியே திரிந்து வருத்தப்பட்டது யார்? அவரோடுகூடவே கஷ்டநஷ்டங்களுக்குப் பங்காளியாயிருந்தது யார்? அவருடைய சகோதரியே. இராத்திரிதோறும் அவர்க்கு உதவியாயிருந்து உழைத்தவள் அவருடைய சகோதரியே; வானசாஸ்திரத்தைப் பரிசோதனைசெய்த விஷயங்கள் அவருடைய வாயைவிட்டு வெளியேவருவதற்குமுன்னமே அவற்றைக் கடிதத்தில் அமைத்தது அவளே; வானசாஸ்திரக் கருவிகளண்டையில் இராப்பொழுதையெல்லாம் போக்கி அப்போது கண்ட விஷயங்களைக்குறித்து எழுதிவைத்துக்கொண்ட பத்திரிகைகளையெல்லாம் காலையில் தன் வீட்டுக்குக் கொண்டுபோய்த் திருத்தமாய் எழுதிக்கொண்டுவந்ததும் அவளே; அன்றன்று ராத்திரி இன்னின்னவேலை செய்யவேண்டுமென்று முன்னமே ஏற்பாடுசெய்துவைப்பவளும் அவளே; வானக்காட்சிகளைச் சுலபமாய்க் காணும்படி ஏற்பாடுசெய்ததும், அதற்கு வேண்டிய விஷயங்களைக் கணித்துச்சொன்னதும் அவளே; எல்லாவிஷயங்களையும் கிரமப்படி ஒழுங்குபடுத்திவைத்ததும் அவளே; என்றும் அழியாத பேரும் புகழும் பெறும்படி அவர்க்கு உதவிசெய்துவந்தவளும் அவளே" என்று சொல்லியிருக்கிறார்.

தள்ளாத வயதிலும் அப்பெருமாட்டிக்கு இத்தன்மையான புகழ்ச்சிகள் உண்டாயின. இவ்வண்ணமான கெரோலியன் ஹெர்ஷல் ராஜாங்கத்தாராலும் பண்டிதர்களாலும் மற்றுமுள்ள பல நேசர்களாலும் மேன்மையாகக் கொண்டாடப்பட்டு இறக்குமளவும் ஹானேவர் நகரத்திலேயே இருந்து, சிறிதும் சுயப்பிரயோஜனத்தை நாடாத நேசமுடையவளென்றும், சிறந்த சாமர்த்தியமும் ஓயாது உழைக்குந்திறமையும் உடையவளென்றும், தன் சகோதரர் கொண்ட கருத்துப் பரிபூரணமாகும்படி அவர்க்குத் துணைசெய்தே காலத்தைக் கழித்தவளென்றும் எந்தக்காலத்தும் எல்லோரும் கொண்டாடும்படி அழியாப்புகழை உலகத்தில் நாட்டிவிட்டுத் தொண்ணூற்றெட்டாவது வயதில் இறந்துபோனாள்.

சிறுவர்க்குரிய முதன்மையான கடமை.

தம்மக்களுக்குவேண்டிய பொருள்களைச் சம்பாதித்துக்கொடுத்து அவர்களைப் பாதுகாத்து அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்களையும் செம்மையாய்க் கற்பித்துக்கொடுப்பது பெற்றோர்களுடைய கடமையென்று முன் சொன்னோமே. அதற்குப் பிரதியாக அம்மக்கள் செய்யவேண்டிய கடமை ஒன்றுமில்லையாவென்பீர்களோ? அவர்களுக்குரிய கடமைகள் அநேகமிருக்கின்றன; ஆனாலும், பிறந்தமாத்திரத்திலேயே பிள்ளைகளுக்கு நன்மைதீமைகளைத் தெரிந்துகொள்ளும் திறமை உண்டாகாதாகையால், இவ்வுலகத்தில் நன்றாய்ப் பழகி அனுபவத்தில் முதிர்ந்த மூத்தோர்களுடைய நற்புத்தியை ஆதாரமாகக்கொண்டு, தமக்கு நல்லவிவேகமும் நன்மை தீமைகளை ஆராயும் திறமையும் உண்டாமளவும், அவர்களுடைய சொற்படியே நடந்துவருவது மிகவும் உத்தமமானது.

ஆகையால் சிறுவர்க்குரிய முதன்மையான கடமை கீழ்ப்படிதலாம். கீழ்ப்படிதலாவது சொன்னகாரியத்தைத் தடையின்றிச் சந்தோஷமாய் உடனே செய்வதாம். உண்பது உறங்குவது வீண்பொழுது போக்குவது முதலான தமக்கு இஷ்டமான காரியங்களைச் செய்யச்சொன்னால் சிறுவர்கள் உடனே அதற்கு உடன்படுகிறார்களல்லவா? அவ்வண்ணமே தமக்குச் சம்மதமில்லாத காரியங்களானாலும், தம்மைப்பார்க்கிலும் அறிவில் முதிர்ந்த மூத்தோர்கள் எந்தவேலை செய்யச்சொன்னாலும் சிறுவர்கள் அவற்றைத் தடையின்றிச்செய்ய உடன்படவேண்டும்.

"நான் ஏன் படிக்கக் கற்கவேண்டும்? புத்தகங்களையெடுத்துப் படிக்க எனக்கு இஷ்டமில்லை. விளையாட்டுக்கருவிகளை வைத்துக்கொண்டு விநோதமாய் விளையாடுவதிலேயே எனக்கு விருப்பம் அதிகமாயிருக்கிறது" என்று சிறுவர்கள் தற்காலத்தில் சொன்னாலும் சொல்வார்கள். ஏனெனில், சில வருஷங்களுக்குப்பிறகு இவ்விளையாட்டுக்கருவிகள் தமக்கு விநோதமுண்டாக்கமாட்டாவென்றும், இவ்விளையாட்டுக்கருவிகளையெல்லாம் தள்ளிவிட்டுப் புத்தகங்களில் சொல்லிய புதுமையான வேறு கருவிகளைக் கைக்கொண்டு விநோதமாய்ப் பொழுதுபோக்கும்படியான காலம் சீக்கிரமே வந்துவிடுமென்றும் தற்காலத்தில் அவர்களுக்குத் தெரியாது.

"எனக்கு எழுத இஷ்டமில்லை. கீழும் மேலும் நீளமும் கோணலுமாய்க் கோடுகளிழுத்து எழுதுவது வீண் வருத்தமானவேலை" என்றும் சில பிள்ளைகள் சொல்வதுண்டு. அந்தக் கோடுகளில் அடங்கியிருக்கின்ற ஐசுவரியம் இப்படிப்பட்டதென்பது அவர்களுக்கு

இப்போது தெரியாதாகையால் அப்படிச் சொல்லுவார்கள். அதன் பெருமை எப்படிப்பட்டதென்பீர்களோ? இந்த வித்தையைப் பல்லாயிரம்வருஷம் பலகோடி வித்வான்கள் வெகுவாய்ப் பிரயாசப்பட்டு இப்போது நமக்கு இவ்வளவெளிதாகச் செய்திருக்கிறார்கள். நாம் காண்பது செய்வது சிந்திப்பது முதலான பல விஷயங்களையும் கடிதத்தில் குறித்த சில புள்ளிகளின்மூலமாய் அவ்வித்தை வெளியிடவல்லது. இதை ஒருவன் கற்றுக்கொள்வானுனால் அப்போது, படிப்பதும் எழுதுவதும் எவ்வளவு கடினமான வேலை! அதில் மிகவும் அலுப்பு உண்டாகின்றது என்று சொல்வதற்குப் பதிலாக, இந்த அற்புதமான வித்தையை நான் எவ்வளவு சுலபமாய்க் கற்றுக்கொள்ளும்படி செய்திருக்கிறார்கள். இதன் மூலமாய் நான் சிந்திப்பது செய்வது முதலான பல விஷயங்களையும் அநேகம் காததூரத்துக்கு அப்பாலிருந்தாலும் அப்படிப்பட்டவர்களுக்கும் ஒரு துண்டுக் கடிதத்தைத் தபாலில் அனுப்பித் தெரிவிக்கக்கூடும். அவ்வண்ணமே தபால்வழியாய் வந்த துண்டுக்கடிதத்தைப் பார்த்து நெடுந்தூரத்துக்கு அப்பால் இருப்பவர்களுடைய கருத்தையும் நான் எளிதில் அறிந்துக்கொள்ளக்கூடும் என்று சொல்லிச் சந்தோஷிக்கும்படியாகும்.

ஒருவர்கண்ணுக்கும் தெரியாமலும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பெயர்த்தெடுத்துக்கொண்டுபோகக்கூடாமலுமிருக்கின்ற அருமையான பொருளாய் ஒருதரம் நமக்குத் தோன்றிய அபிப்பிராயங்களைக் கண்ணுக்குத் தெரியும்படியான பொருளாக்கி, அப்படி ஒருதரம் தோன்றிய அபிப்பிராயங்களை வேண்டும்போதெல்லாம் பார்த்து நினைத்துக்கொள்ளும்படியாகவும், பிறகு பலவருஷங்கள் கழிந்தபின் பிறப்பவர்களும் அம்முன்னோர்களுடைய கருத்தைத் தெரிந்துகொள்ளும்படியாகவும் புத்தகங்களாகச் சேர்த்து வைக்கும்படியான வழியைக் கண்டுபிடித்தது எவ்வளவு அற்புதமானது! இவ்வண்ணமாக இக்காலத்தவர்கள் பூர்விகர்களுடைய கொள்கைகளையும் கற்பனைகளையும் நன்றாய்ப் பார்த்துத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இவைமாத்திரமேயல்ல; இப்பூமியில் ஓரிடத்தில் தோன்றியவர்களுடைய கொள்கைகளும் கற்பனைகளும் புத்தகங்களின் மூலமாய் இப்பூமண்டலம் முழுதும் கொண்டுபோகப்படுகின்றன. இப்போது நாமும் எழுத்துக்களையும் சொற்களையும் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டு, இப்பூமண்டலத்தில் எக்காலத்திலுமிருந்த மிகச்சிறந்த வித்வான்களெல்லாம் வெகு சிரமப்பட்டுக் கற்றறிந்த விஷயங்களையெல்லாம் எளிதில் கற்றுக்கொள்ளவல்லவர்களாயிருக்கிறோம்.

எழுதப்படிக்கத் தெரியாத ஒருவனுடைய மனமானது எப்புறத்திலும் எள்ளளவும் ரந்திரமில்லாத மிகவும் இருண்ட ஒரு சிறுபெட்டிக்குள் அடைத்துவைக்கப்பட்டதுபோலாம். பற்பல

சித்திரவிசித்திரங்களடங்கிய இந்தப் பிரம்மாண்டத்தில் பல பண்டிதர்கள் அநேக வருஷகாலம் ஆராய்ச்சிசெய்து ஏற்படுத்திய விஷயங்களெல்லாம் சிறுவர்கள் எளிதில் அறிந்துகொள்ளத்தக்க சிற்சில கதைகளாக மாற்றப்பட்டு அவர்களுடைய பாடபுத்தகங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிள்ளைகள் தம்முடைய இளமைப்பருவத்தில் அவ்விஷயங்களாகிய மிகவும் இனிப்பான உணவுகளை மனதுக்கு ஊட்டுவார்களானால், அம்மனது வரவர உறுதிப்பட்டு, முற்றமுற்றப் பின்னும் சாரமான உணவுகளை உண்டு களிப்படையவல்லமையுடையதாகும். ஆகையால் சிறுவர்கள் வயிற்றுக்கு வேண்டிய உணவுகளை உண்ணாமல் ஒதுக்குவது எவ்வளவு மூடத்தனமோ, மனதுக்கு இனிய இவ்வுணவுகளை ஏற்றுக்கொள்ளாமலிருப்பதும் அவ்வளவு மூடத்தனமாம்.

இவ்வாறு கல்விகற்பதிலுள்ள நன்மை இப்படிப்பட்டதென்று எண்ணக்கூடாததாயிருந்தாலும், சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பது எளிதானகாரியமல்ல. தம்முடைய குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து நன்மைசெய்விப்பதில் எவர்க்கும் மிகுந்த சந்தோஷமே; ஆனாலும், படிக்க விருப்பங்கொண்டு சொன்னபடிகேட்டுக் கீழ்ப்படியும் தன்மையுள்ள குழந்தைகளானாலுங்கூட நாள்முழுதும் அப்பிள்ளைகளண்டையில் உட்கார்ந்து அவர்களோடு போராடித் துளித்துளியாய் அவர்களுக்கு அறிவு புகட்டிக்கொண்டிருப்பது உபாத்தியாயர்களுக்கு மிகவும் வெறுப்பு உண்டாக்கத்தக்க காரியமாம்; அப்படியிருக்கப் பிள்ளைகள் சோம்பேறிகளாயும் படிக்க விருப்பமில்லாதவர்களாயும் அடங்காதவர்களாயுமிருப்பார்களானால் கேட்கவேண்டுவதென்ன? அவ்விதமான பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் தான் நெடுநாள்முன்னமே தெரிந்துகொண்ட விஷயங்களையெல்லாம் திருப்பித்திருப்பிப் பலதரம் சொல்லிக்கொண்டு காலைமுதல் மாலைவரையில் எவ்வளவு பொறுமையாய் உட்கார்ந்திருக்கிறார்! அப்படிப்பட்ட உபாத்தியாயர்களுக்கு மாணாக்கர் என்ன பிரதியுபகாரம் செய்தால் தீரும்? உபாத்தியாயர்களிடத்தில் பிள்ளைகள் அடக்கமும் பக்தியும் உடையவர்களாகி அவர் சொற்படி கேட்டுப் படித்துத் தேறவிரும்புவார்களானால் அதுவே அவ்வுபாத்தியாயர்களுக்குக் கொஞ்சம் சந்தோஷமுண்டாக்கத்தக்க வழியாகும்.

பாடம்படிக்கிற காலங்களில்மாத்திரமேயல்ல; நாள்முழுதும் சிறுவர்களைத் தீயவழியிற் புகாதபடி கண்காணித்துக்கொண்டே வரவேண்டும். அஜாக்கிரதையாய் நெருப்பண்டை போயாவது கொள்ளிக்கட்டை முதலியவைகளை வைத்து விளையாடிக்கொண்டாவது துணியைக் கொளுத்திக்கொண்டு எத்தனை பிள்ளைகள் இறந்து போயிருக்கின்றன; கிணற்றங்கரையிலும் குளத்தங்கரையிலும் விளையாடி எத்தனை குழந்தைகள் தண்ணீரில் வீழ்ந்து அமிழ்ந்து போயிருக்கின்றன; எத்தனை குழந்தைகள் தெருவிலோடி வண்டி

யின்கீழ் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றன; எத்தனை குழந்தைகள் விஷத்தன்மையுள்ள வஸ்துக்களைத் தின்று வருத்தப்பட்டிருக்கின்றன; எத்தனை குழந்தைகள் ஒன்றுக்கொன்று அடித்துக்கொண்டும் வேறுவிதமான தீங்குகளைச் செய்துகொண்டும் தொந்தரைப்படுகின்றன; இப்படிப்பட்ட பல பொல்லாங்குகளுக்கெல்லாம் காரணமென்ன? தமக்கு நன்மைதீமைகள் இவையெனத் தெரியாதிருப்பதேயல்லவா? ஆகையால் குழந்தைகள் இப்படிப்பட்ட தீமைகளுக்கு ஆளாகாதபடி எப்போதும் அவைகளின்மேல் கண்ணுயிருந்து பத்திரமாய்ப் பரிபாலித்துவரவேண்டும்.

ஆதலால் தம்மை என்னகாரியம் செய்யும்படி பெரியோர் நியமித்தாலும் சிறுவர்கள் அதைத் தடுக்காமல் உடனே செய்யக் கடவர்கள். அப்படி அவர்கள் செய்யச்சொன்னதற்குக் காரணம் இன்னதென்று பிறகு ஒருவேளை அச்சிறுவர்களுக்கே தெரிந்தாலும் தெரியலாம்; ஒருவேளை தெரிந்துக்கொள்ளக்கூடாமல் இருந்தாலுமிருக்கலாம். எப்படியிருந்தாலும், நம்மைப்பார்க்கிலும் வயதிலும் அறிவிலும் முதிர்ந்தவர்களான ஆப்தர்கள் நமக்குச் சொல்வது மிகவும் நன்மையாகவேயிருக்குமென்று நம்பி எப்போதும் அவர்கட்குக் கீழ்ப்படிந்து சொன்னவண்ணம் செய்துவரக்கடவர்கள்.

எப்படிப்பட்ட ஆபத்திலும் மூத்தோர்சொல்லை மறுக்காதிருந்ததனால் பிள்ளைகள் சவுக்கியம் அடைந்ததற்குப் பல திருஷ்டாந்தங்களுண்டு. ப்ராஷியாதேசத்து இருப்புப்பாதையொன்றில் வண்டிக்குக் குறிகாட்டுவோனுடைய குழந்தையொன்று வண்டிவருகிற வழியில் தற்செயலாய் ஓட அப்போது திடீரென்று வண்டி வந்துவிட்டதுகண்டு வேலைக்காரன் தன் வேலையைவிட்டுப் போய்க் குழந்தையை எடுக்கக்கூடாமையைக்கண்டு மிகவும் அச்சம்கொண்டு வண்டி ஓடுகிற இரண்டு கம்பிகளுக்குமிடையில் அப்படியே கவிழ்ந்து படுத்திருக்கும்படி குழந்தைக்குக் கட்டளையிட, அவன் சொன்னபடி கேட்டு அங்கேயே படுத்திருந்து அக்குழந்தை பிழைத்ததென்று நாம் முன் இந்த ஜநவிநோதிநியில் கீழ்ப்படிதலைப்பற்றி எழுதியபோது சொல்லியிருக்கிறோமல்லவா? பிறகு அந்த வேலைக்காரனுடைய யோக்கியதை அத்தேசத்து அரசனவாயில் தெரிந்து அவனுடைய ஆண்மைக்காக வெகுமதிகூடக் கிடைத்ததாயும் சொல்லுகிறார்கள்.

ஆதலால் தமக்கு இன்பமில்லாத காரியத்தைச் செய்யும்படி பெரியோர்கள் திட்டம்செய்தாலும், நம்முடைய உற்றார் பெற்றோர் முதலியவரெல்லாம் சுயலாபத்தைச் சிறிதும் எதிர்பாராமல் நமக்காகவே எவ்வளவு உதவிசெய்துவருகிறார்களென்பதையும், நாம் ஒன்றும் அறியாத கைக்குழந்தையாயிருக்கும்போது இரவும் பகலும் எவ்வளவு பாடுபட்டு நம்மை எவ்வளவு பக்ஷமாய்ப் பாதுகாத்து

வந்தனரென்பதையும், அவர்கள் தங்களுடைய வேலைகளையெல்லாம் விட்டுத் தேகசவுக்கியத்தையும் பாராமல் எப்படியாவது குழந்தைகள் சவுக்கியப்பட்டாற்போதுமென்று எவ்வளவு வருத்தப்பட்டு நமக்குக் கல்விகற்பிப்பது முதலிய பல நன்மைகளையும் செய்து வருகிறார்களென்பதையும் நினைத்து அவர்களுக்கு அடிமைப்படக் கடவர்கள்.

சிறுவர்கள் பெற்றோர்சொன்னபடி செய்வதுமாத்திரமேயன்றி, தம்முடைய குடும்ப சவுக்கியத்துக்காகவும் க்ஷேமத்துக்காகவும் அவர்கள் ஏற்படுத்திய விதிகளுக்கும் உட்பட்டு நடக்கவேண்டும். பிள்ளைகளையெல்லாம் அவனவன் இஷ்டப்படி நடக்கவிட்டிருப்பவர்களுடைய வீடு என்றைக்காவது சச்சரவில்லாதிருக்குமா? சில குழந்தைகள் ராத்திரி பதினைந்துநாழிகைவரையில் தூங்காமல் இருக்க விரும்புகின்றன; சில குழந்தைகள் உதயமாய் வெகு நாழிகைவரையில் படுக்கையைவிட்டு எழுந்திராதிருக்க விரும்புகின்றன; சில குழந்தைகள் வேளையிலே கூடப்புசிக்க விரும்பாதிருக்கின்றன; சில குழந்தைகள் நாள்முழுதும் ஓயாமல் வாயை அரைத்தபடியே இருக்க விரும்புகின்றன; சில பிள்ளைகள் அழுக்குத்துணியும் ஊத்தைவாயுமாயே எப்போதும் திரிகின்றன; சில பிள்ளைகள் எப்போதும் விளையாட்டிலேயே விருப்பம்கொண்டிருக்கின்றன; சில பிள்ளைகள் எப்போதும் தொந்தரைசெய்கின்றன; சில எப்போதும் கூச்சலிடுகின்றன; இப்படி ஒவ்வொரு பிள்ளையினுடைய கருத்தும் ஒவ்வொருவிதமாயிருக்கின்றது.

ஆகையால் குழந்தைகளை அததின் இஷ்டப்படி ஆடவிட்டிருக்கின்ற வீடுகளில் எப்போதும் ஆரவாரமாயே இருக்கும்; அமைதியாய் ஒரு காரியமும் நடக்கமாட்டாது; எவர்க்கும் சவுக்கியம் கிடைக்கமாட்டாது. அப்படியின்றி வீட்டிலுள்ளவர்களுடைய சவுக்கியத்துக்காக ஏற்படுத்திய நிபந்தனைகளுக்கு உட்பட்டு எல்லாப் பிள்ளைகளும் நடந்துவருவார்களானால் யாவரும் சவுக்கியமடைவார்கள். பிள்ளைகள் இன்னகாலத்தில் புசிக்கவேண்டும், இன்னகாலத்தில் தூங்கவேண்டும், இன்னகாலத்தில் வேலைசெய்யவேண்டும், இன்னகாலத்தில் விளையாடவேண்டும், யாவரும் ஒழுங்காய் ஒருவர்க்கொருவர் நேசமுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்று இப்படி தகுந்த ஏற்பாடுசெய்து வீட்டுக்காரியங்களைப் பரிபாலிக்கவல்லவனாய், ஈவிரக்கமும் நல்லவிவேகமும் உடையவன் ஒருவன் ஏற்படுவானானால் அந்த வீட்டுக்கு ஒரு குறையுமில்லை.

பிள்ளைகள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியவேண்டுமென்பது மாத்திரமேயல்ல; போர்வீரர்களும் கப்பற்காரர்களும் இவர் போன்ற இன்னும் பலரும் தம்தம் யஜமானனுக்குக் கீழ்ப்படிந்து அவன் சொற்படிகேட்டு நடக்கவேண்டும். அப்படியே தேசத்து ஜனங்கள் அவர்களுக்காக ராஜாங்கத்தார் ஏற்படுத்திய சட்டதிட்டங்

களுக்கு உட்பட்டு நடக்கவேண்டும்; நடவாமற்போனால் வெகு சங்கடமுண்டாகும். ஆகையால் பிள்ளைகள் முதலிலே வீடுகளில் பெற்றோர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் கீழ்ப்படிந்திருக்கப் பழகுவது பிற்காலத்தில் ராஜாங்கத்துக் கட்டளைமுதலியவற்றிற்குக் கீழ்ப்படிவதற்கு ஆதாரமாம். கீழ்ப்படிதலொன்றில்லாவிட்டால் ஒரு அற்பமான வீட்டைப்போலவே மிகப் பெரிதான ராஜ்யமும் வாஸயோக்கியமல்லாததாகிவிடும். கீழ்ப்படிதலில்லாவிட்டால் நம்மை என்றும் கைவிடாமல் காப்பாற்ற வல்லகடவுளும் நம்மிடத்தில் கருணைபுரியமாட்டார்.

ருதுக்களின்வர்ணனை—வஸந்தருது

(தொடர்ச்சி.)

வேடர்தலைவன் மகனான ரங்கசாமி தான் விநோதமாய் விளையாடுவதற்காக விடுமுறைநாள் எப்போ வரப்போகிறதென்று நாளெண்ணிக்கொண்டிருந்தானென முன் சஞ்சிகையிற் சொன்னோமே; அப்படியே விடுமுறைநாள் வந்தது. அப்போது அம்மகன் தன் தங்கையோடு கூடிக்கொண்டு, சிசிரருதுவிலே செம்மைதப்பிக்கிடந்த குறைதீர மிகுந்த விகாஸத்தோடு விளங்காநின்ற பலவிதமான பொருள்களையும் கண்ணாரக்கண்டு களித்துக்கொண்டும், அவைகளின் தன்மையையும் உபயோகங்களையும் தனக்குத் தெரிந்தவளாயில் தங்கைக்குத் தெரியச்சொல்லிக்கொண்டும், நிரம்பத் தளிர்த்த தளிர்களாலும் பாதி மலர்ந்தும் மலராதுமிருக்கின்ற பூங்கொத்துக்களாலும் அடிமுதல் நுனிவரையில் அலங்கரிக்கப்பெற்ற பலவகைக் கொடிகள் ஏறிப்படர்ந்த கொடிமண்டபங்களிற்சேர்ந்து விஹரித்துக்கொண்டும், மற்ற ருதுக்களிலேபோல ஊமையாயிராமல், இளந்தளிர்களை வயிறாரத் தின்று கொழுத்துக் காதுக்கினிப்பாய்க் குயில்கள் கூவுவதையும், மகரந்தங்களை மிகுதியாகக் குடித்து மதித்த பிரமரங்கள் ரீங்காரஞ்செய்வதையும், பலவகைப் பழங்களைத்தின்று மதுரமாய்க் கிளிகள் பாடுவதையும் கேட்டு ஆநந்தித்துக்கொண்டும் விளையாடித்திரிந்தான். மேலும் நாள்தோறும் மாலைவேளையில் தம்வீட்டுக்கு அருகாமையிலுள்ள ஏரிகரைக்காயினும், மலைச்சாரலிலுள்ள சுனைகளுக்காயினும் போய் அவ்விடங்களில் குளிர்ந்து வீசுகின்ற மந்தமாருதத்தின் சுகத்தை அனுபவித்து ஆநந்தமடைந்துவருவான்.

இப்படியிருக்க ஒருநாள் காலையில் முத்துசாமி தன் மக்களைப் பார்த்து, குழந்தைகாள், பெண்ணையாற்றங்கரையிலுள்ள தேவாலயத்தை நீங்கள் பலதரம் பார்த்திருக்கிறீர்களல்லவா? அது ஸோமநாத சுவாமியினுடைய கோவில். அதில் அன்றையதினம்

குருக்கள் சொல்லிப்போனபடியே இன்று வஸந்தோச்சவாரம்பம். இந்த வஸந்தோச்சவத்தில் சுவாமியை அர்ச்சிப்பது மிகவும் விசேஷமென்கிறார்கள். ஆகையால் நாளை விடியனேரத்திலேயே நீங்கள் பெரிய தாதியைத் துணையாய் அழைத்துக்கொண்டு நமது தோட்டத்துக்குப் போய்ப் பூப்பறித்துக்கொண்டுவாருங்கள். மறு நாள் அந்தப் பூக்களை எடுத்துக்கொண்டு நாமெல்லாரும் போய் ஸோமநாதனை ஸேவித்து அர்ச்சனைமுதலானவை செய்வித்து வருவோமென்றான். அதுகேட்டுப் பிள்ளைகள் மிகவும் சந்தோஷமடைந்து அப்படியே போய்ப் பூப்பறித்துக்கொண்டுவருகிறோம். நாங்கள் போய் வருவதற்குள் வெயிலேறிப்போகுமாதலால் நடுப்பகலில் வீட்டுக்குவருவது வருத்தமாயிருக்கும். கொஞ்சம் சோறு கட்டிக்கொடுத்தால் வெயில்வேளையில் தோட்டத்திலேயே புசித்துவிட்டு வெயில்தாழ வீட்டுக்கு வருகிறோமென்று சொல்ல, அவர்கள் சொல்வது உசிதமேயென்று தெரிந்து அப்படியே செய்யுங்கள் என்று அநுமதிகொடுத்தான்.

மறுநாள் விடியனேரத்திலே பிள்ளைகள் மூன்றுபேரும் எழுந்து, எட்டோடுதோய்த்த தயிர்விட்டுத் தாய் கட்டிக்கொடுத்த சோற்றுமூட்டையைத் தாதி எடுத்துக்கொண்டுவர அவளோடு கூடப் பூந்தோட்டத்திற்குப் போனார்கள். அத்தோட்டத்தில் மா பலா கமுகு வாழை முதலிய பலவகை மரங்கள் தோப்புத்தோப்பாய் எங்கும் நிறைந்திருப்பதையும், பலவிதமான பூஞ்செடிகள் நிரம்பப் பூத்துத் தோட்டமெல்லாம் வெகு அலங்காரமாயிருப்பதையும் கண்டு களிகூர்ந்து பூப்பறிக்க ஆரம்பித்தார்கள். அப்போது அப்பூக்களுள் ஒன்றிலிருந்த ஒரு வண்டு ரீங்காரம் செய்துகொண்டு மரகதத்தின் கன்னத்தண்டை வந்தது. அதுகண்டு அச்சிறுமி பயந்து, அக்கா, பூச்சி! பூச்சி!! என்று கதறினாள். அது கேட்டு மோகனம் திகிலடைந்து என்ன என்னவென்று கூவிக்கொண்டு சமீபத்தில் ஓடிவந்துபார்த்துக் காரணமின்னதெனத் தெரிந்துகொண்டு, குழந்தாய், பயப்படாதே; இதோ நான் அந்தப் பூச்சியை அடித்து ஓட்டிவிடுகிறேன் என்று அம்மகளுக்குப் பயம் தெளியும்படி சமாதானமாய்ப் பேசினாள். அதுகண்டு ரங்கசாமி கலகலவென்று நகைத்து, மரகதம் வண்டுக்கா நீ பயப்படுகிறாய்; இப்படிப்பட்ட பயங்காளியை நானெங்கும் பார்த்ததில்லையே. இதோ பார்; நான் அந்தப் பூச்சியைப் பிடித்துக் கொல்லுகிறேன் என்றிப்படிப் பேசி அச்சிறுமிக்குச் சிரிப்பு உண்டாக்கி, பின்னும் பூப்பறிக்கத்தொடங்கினான். இப்படி அம்மக்கள் விநோதமாய்ப் பேசிக்கொண்டு வேண்டிய பூப்பறித்துக்கொண்டு, நாழிகையேறி வெயில் உக்கிரமானது கண்டு அத்தோட்டத்து மத்தியில் மா பலா கமுகு வாழை புன்னை சரப்புன்னை எலுமிச்சை கிச்சிலி மாதுளை முதலிய பலவகை விருக்ஷங்களால் சூழப்பட்ட மிகப் பெரிதான தாமரைத்

தடாகமொன்றிருக்கக் கண்டு அதினண்டை போய்ச்சேர்ந்து அத்த டாகத்தில் நீந்தி விளையாட நினைத்து, அருகாமையிலிருந்த ஒரு சரப் புன்னைமரக்கிளையில் தங்கள் குடலைகளை மாட்டிவிட்டுக் குளத் தில் இறங்கித் தங்கள் விடாய்தீர நீரில் மூழ்கிக் குளித்துத் தங்கள் கைக்கு எட்டியவரையில் அத்தடாகத்திலுள்ள தாமரைமலர் களைப் பறித்துக்கொண்டு, பொழுதுபோயிற்று, பகற்போஜனம் புசிக்க வேளைதப்பிப்போகிறது என்று தாதி பலதடவை வேண்டி யழைத்தது கேட்டுக் கரையேறினார்கள். கரையேறி அங்கோர் மரத்தண்டை போய்ச்சேர்ந்து தம்மருகில் வந்துநின்ற தம்முடைய அருமைநாயை நீந்தும்படி செய்யநினைத்துச் சிறுசிறு கற்களைப் பொறுக்கி அதைத் தண்ணீரில் எறிய, அந்தக் கல் தண்ணீரில் விழு வதற்குமுன்னமே நாய் திடீரென்று குதித்து அக்கல்லை வாயிற்கவ்விக் கொண்டு தம்மிடம் வரக்கண்டு கலகலவென்று நகைத்தும், ஒவ்வொ ருதடவை அந்தக் கல் தன் வாயில் அகப்படாமல் மூழ்கிப்போக நாயும் அத்துடன் மூழ்கி அல்லாடித் தேடுவதுகண்டு கைகொட்டி நகைத்தும் இவ்வண்ணமாகப் பொழுதுபோக்கிக்கொண்டு தம்மு டம்பை நன்றாய்த்துடைத்து ஈரத்துணியை உலரப்போட்டு உலர்ந்த துணிகளை அணிந்துகொண்டு, சூரியனாகிய கொடிய வேட்டைக் காரனுடைய கிரணங்களாகிய பாணங்களுக்குப் பயந்து ஓடிவருகிற வழிப்போக்கர்களாகிய மான்களுக்கு ரக்ஷணஸ்தானம்போல் அடி முதல் நுனிவரையில் இடைவெளியின்றித் தளிர்த்துத் தழைந்த ஒரு மரத்தடியில் உட்கார்ந்து, தாம் பறித்துக்கொண்டுவந்த தாமரையிலை யிலே தாதி கட்டுச்சோற்றை எடுத்துக்கொடுக்க, விநோதமாய்ப் பேசிக்கொண்டு வயிறாரப் புசித்துவிட்டு அம்மரத்து நிழலிலேயே தம் மேல்வஸ்திரத்தைக் கீழே பரப்பிக்கொண்டு படுத்தார்கள்.

அப்போது நாநாவிதமான புஷ்பங்களின் பரிமளத்தோடு குளி ர்ந்து மந்தமாருதம் வீசவும், தாம் படுத்த பசும்புற்றரையாகிய படுக் கை மிகவும் மெத்தென்று இருக்கவும், படுத்தவுடனே அவர்களுக்கு மெய்ம்மறந்து நித்திரை வந்துவிட்டது. மாலைப்பொழுதாகியும் அந் நித்திரை தெளியவில்லை. அப்படியிருக்கப் பொழுதுபோகிற தரு ணத்தில், வெளியே இரைதேடிப்போயிருந்து கூடுகளுக்குத் திரும் பிவருகின்ற பறவைகளின் கூச்சல்களும், மேய்ச்சற்புலங்களிலி ருந்து வீட்டுக்குத் திரும்பிவரும்போது வழியே கன்றுக்குட்டிகளை நினைத்துக்கொண்டு கூவுகின்ற பசுக்களின் பேரொலிகளும், பட் டிக்குள்ளிருந்து பட்டிகளும் பிளந்துபோம்படி கத்துகின்ற குட் டிகளுக்கு மறுமொழியாகக் கத்துகின்ற ஆடுகளின் இரைச்சலும் ஒன்றாய்க் கூடி பிரதித்தொனி உண்டாகும்படிப் பல திக்குகளிலும் பரவ, அதுகேட்டுத் தாதி திடீரென்று கண்விழித்துக்கொண்டு பொழு துபோகிற தருணமானதுகண்டு திகிலடைந்து, குழந்தைகாள், எழுந் திருங்கள், எழுந்திருங்கள், பொழுதெல்லாம் போயிற்று; நித்திரை

யொன்றுவந்து நம்மையெல்லாம் மயக்கிவிட்டது. நாம் வீட்டைவிட்டுவந்து நெடுநேரமாகிவிட்டது; இனித் தாமதப்படக்கூடாது. இருட்டுவதற்குமுன் வீடுபோய்ச் சேராவிட்டால் தந்தை கோபித்துக்கொள்வார். நாமும் இருட்டில் வீட்டுக்குப் போவது கஷ்டம். சீக்கிரம் எழுந்திருங்கள் என்று சொல்லி அப்பிள்ளைகளை எழுப்ப, அவர்களும் உடனே எழுந்து குடலைகளைக் கையில் எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

அந்தச் சமயத்தில் ஏதோ காரியவசமாய் வெளியேபோய்த் திரும்பிவந்துகொண்டிருந்த பாடசாலை உபாத்தியாயர் இப்பிள்ளைகளைப் பார்த்து, ரங்கசாமியை அழைத்து, இதென்ன, பொழுதுபோன வேளையில் எங்கே போய்வருகிறீர்கள் என்று கேட்க, அச்சிறுவன் நாளைக் காலையில் ஸோமநாத ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்விப்பதற்காகப் புஷ்பம் எடுத்துக்கொண்டுவரும்படி தந்தை நியமித்தார். தோட்டத்திற்குப் போய்ப் பூவெடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போகிறோம் என்றான். அதுகேட்டு உபாத்தியாயர் அப்படியா, சந்தோஷம், பொழுதுபோயிற்று; சீக்கிரமாய் நடந்துவாருங்கள் என்று சொல்லி அவர்களை ஆட்டுமந்தை நிற்கும்வழியாய் அழைத்துக்கொண்டு போய், அம்மந்தையில் ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளும், ஒன்றுக்கொன்று கத்துவதைக் கேட்டு இது தன் தாய், இது தன் குட்டி என்று தெரிந்துகொண்டு தாயும் குட்டியும் ஒன்றோடொன்று சேருகிறவிதங்களை அவர்கட்குத் தெரியக்காட்டி, பார்த்தீர்களா? தாய் குழந்தை என்கிற ஸம்பந்தம் மனிதர்களுக்குமாத்திரமேயல்ல; அவர்களைப் போல எல்லாப் பிராணிகளுக்கும் உண்டென்பதற்கு இது ஒரு பெரிய நிதர்சனமாகின்றது. தாய் குட்டிகளுக்கு எவ்வளவு பிரீதியுடன் பால்கொடுக்கின்றது; குட்டிகள் தாய்க்குச் சந்தோஷமுண்டாகும்படி முட்டிமுட்டி எத்தனை அழகாய்ப் பாலுண்டு பசிதீர்ந்து களிப்படைந்து விநோதமாய் விளையாடுகின்றன பாருங்கள் என்று அதைப்பற்றிய செய்திகளை அப்பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொண்டே ஆட்டிடையனைக் கேட்டு அச்சிறுவர்களுக்குக் கொஞ்சம் பால் வாங்கிக்கொடுத்து, இந்த விடுமுறைநாளில் நீ செய்யப்போகிற காரியங்கள் பலவற்றுள்ளும் நாளைசெய்யப்போகிற ஸ்வாமி ஸேவையே மிகவும் விசேஷமானது என்று சொல்லி ரங்கசாமியைக் கொண்டாடி அவர்களை வீட்டுக்கு அனுப்பி தானும் தன் வீடுபோய்ச் சேர்ந்தான். அந்தப் பிள்ளைகளும் தாதியும் நாயும் கூடவர நன்றாய்க் கண்ணுக்கு இருட்டுவதற்குமுன் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். அதற்குள்ளே அவர்களுடைய தாய்தந்தையர்கள், பொழுதுபோயிற்றே; குழந்தைகள் இன்னும் வந்து சேரவில்லையே. பிள்ளைகள் விளையாட்டுத்தனத்தால் தாமதம்பண்ணிக்கொண்டிருந்தாலும் தாதியாவது துவரைப்படுத்தி அவர்களைப் பொழுதுபோவதற்குள் அழைத்துக்கொண்டு வரலாகாதா? என்னசெய்கிறது; நாமா

வது போய்த் தேடிப்பார்த்து அழைத்துக்கொண்டு வரலாமா என்று இப்படி சிந்தித்துக்கொண்டேயிருக்க, பிள்ளைகள் வரக்கண்டு மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். பிறகு அவர்கள் தாம் காலையில் வீடு விட்டுப் போனதுமுதல் அதுவரையில் செய்த காரியங்களையெல்லாம் சொல்லக்கேட்டுத் தாய்தந்தையர்கள் பின்னும் அதிக சந்தோஷமடைந்தார்கள். பிள்ளைகளும் உபாத்தியாயர் தமக்கு வாங்கிக்கொடுத்த பாலினாலேயே திருப்தியடைந்து இராப்போஜனம் செய்யாமலே படுத்து நித்திரைசெய்யலானார்கள். காலையில் எழுந்து ஸ்வாமி ஸேவைக்குப் போகவேண்டுமென்ற ஆஸ்தையினால் அவர்கள் செம்மையாக இராத்திரி நித்திரைகொள்ளவேயில்லை. எப்போ பொழுது விடியப்போகிறதென்று காத்திருந்து விடியயாமத்திற்கே எழுந்து தாங்கள் செய்யவேண்டிய தந்தசுத்தி முதலிய அவசியமான காலைக் கடன்களைச் செய்து முடித்துக்கொண்டு பிரயாணத்துக்குச் சித்தமாயிருந்தார்கள். (இன்னும் வரும்.)

நயவஞ்சகனை நம்புதல்.

(ஒரு கதை.)

ஒருநாள் ஒரு வீட்டு மடைப்பள்ளிவாயிலில் படுத்திருந்த பூனையொன்றைக்கண்டு அவ்வழியாக வந்த ஒரு நாய், தோழி, உன்னைப் பார்த்தால் ஏதோ விசனமுற்று மனங்கலங்கி இருப்பதாகக் காண்கிறதே. இதற்குக் காரணம் என்ன? விளங்கச்சொல்லவேண்டுகிறேன் என்றது. அதுகேட்டுப் பூனை தன் தலையைப் பின்புறமாய்த் திருப்பிக்கொண்டதேயொழிய அதற்கொன்றும் பதில் உரைக்கவில்லை.

நாய் அதைப்பார்த்துப் பூனையினிடத்தில் அதிக மரியாதையோடு, தோழி வலியவந்து உன்னை வருத்துவதற்காக நீ மன்னிக்கவேண்டும். உன்னைப்பார்க்க எனக்கு மிகுந்த விசனமுண்டாகின்றது. சற்று உபசாரமாய்ப் பேசினால் உனக்கு உபசாந்தியாயிருக்குமோவென்று நான் உன்னுடன் பேசவந்தேனேயொழிய வேறில்லை என்றது.

நாய் தானே ஓடிப்போய்விடுமென்று பூனை சற்றுநேரம் அதனோடு ஒன்றும் பேசாதிருந்து, பிறகு தான் பதில்சொன்னாலொழிய அது அவ்விடம்விட்டுப் போகாதென நன்றாய்த் தெரியவரவே, சற்றே திரும்பி நாயைப்பார்த்து, எனக்கு விசனமுமில்லை, வருத்தமுமில்லை. எனக்காக ஒருவர் உதவிசெய்யவும் வேண்டாம், பரிதாபப்படவும் வேண்டாமென்றது. அதன்மேல் அவைகட்கு உண்டான ஸம்பாஷணையாவது:—

நாய்: (அதிக வணக்கத்துடன்) தோழி, உன் மனம் நொந்திருக்கிறதென்பதற்கு உன் பேச்சே திருஷ்டாந்தமாகிறது. என்னை மனமொத்த நேசனென்று நினை. உள்ளதை என்னிடத்தில் ஒளியாதே, உன் மனத்துயரம் தீர்ந்தால் அதுவே எனக்குப் பரமசுகமாய்த் தோன்றியிருக்கிறது; மன்னித்து விடைகொடுக்கவேண்டும்?

பூனை: எனக்கு எவரும் துணைசெய்யவேண்டுவதில்லையென்றால் ஏன் வீணேவந்து வருத்துகிறாய்? எனக்கு நித்திரைவருகிறதுபோ.

நாய்: ஏன் தோழி உனக்கு இவ்வளவு வெறுப்பு? உன் மனநிலை மாறியிருக்கிறதென்பதற்கு இதுவே அத்தாட்சியாகின்றது. எதிரில் இப்படிப்பட்ட அதிமதுரமான பணியாரம் வைத்திருக்க, அதை எடுத்துப் புசியாமல் பசியோடு யார்தான் நித்திரைகொள்வார்கள்?

பூனை: என்ன, பணியாரமா? (சற்று வெறுப்போடுகூட அதைத் திரும்பிப்பார்த்து,) பணியாரத்தினிடத்தில் எனக்கு அத்தனையாக விருப்பமில்லை.

நாய்: பணியாரத்தில் அபேக்ஷையில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! பணியாரத்தினிடத்தில் அபேக்ஷையில்லாதவரும் உலகில் இருப்பார்களா? உணவுகளுக்குள் பணியாரமே முதன்மையான உணவென்று நான் எண்ணியிருக்கிறேன்; ஆகையால் எவனுக்குப் பணியாரம் கிடைக்கிறதோ அவனே மிகுந்த பாக்கியசாலியென்பது என்னுடைய கொள்கை.

பூனை: ஆம், அப்படியும் இருக்கலாம். பாதிநாள் பட்டினிகிடக்கும் ஆட்டுநாய்களுக்குப் பணியாரம் அருமையாகத் தோன்றுவது ஸஹஜமே. அதிகாரிவீட்டு அந்தப்புரத்தில் வசிக்கும் பூனைகளுக்கு ஒன்றும் அருமையானதல்ல. மேலும் இப்படி ஒரு அணுவளவு துணிக்கை என் எதிரில் எறிந்துவிட்டால் நான் அந்த எடுத்துத் தின்பேனோ? வேண்டுவதில்லை.

நாய்: (அதுகேட்டுப் பூனை கோபித்துக்கொண்டிருப்பதற்குக் காரணம் ஏதோ இருக்கின்றதெனத் தெரிந்துகொண்டு) ஆம் தோழி, நீ சொல்வது வாஸ்தவமே; அந்தஸ்துக்குத் தக்கபடிதான் யாவும் அமையும். ஆனாலும், அரைவயற்றுச் சோற்றுக்கும் கதிகெட்டவன் என்றாயே, நான் அப்படிப்பட்டவனன்று; பிரபுவைப்போல நான் புசித்திருக்கிற காலமும் உண்டு.

அதைக் கேட்டுப் பூனை நன்றாய்க் கண்ணைவிழித்து நாயைப் பார்த்தது.

நாய்: ஆம் தோழி, நான் சொல்வது பொய்யன்று. ஆடு குட்டி போடுகிறகாலங்களில் எனக்கு ஆட்டுக்குட்டிகள் அநேகமாய் வெகுநாளைக்கு அகப்படும். யஜமானனும் செத்துப்போன ஆடுகள் அடிக்கடி எனக்குத் தின்னக் கொண்டுவந்து கொடுப்பார்.

இப்போதுதான் எனக்கு அத்தனையாகப் பெருந்திண்டி கிடைக்கவில்லை. ஆனாலும் சில்லரை சில்லரையாய் ஏதாவது கிடைக்கும். இப்போது இதோ உன் எதிரில் வைத்திருப்பது மிகத் தித்திப்பான அதிரசம்போலிருக்கிறது. (என்று அதிக ஆவலோடு அதைப்பார்த்துக்கொண்டே சொல்லிற்று.)

பூனை: அது எதுவானாலும் எனக்குத் தேவையில்லை. இவ்வீட்டுச் சமையற்காரி தான் என்னென்னவோ பழமும் பணியாரமும் வைத்துக்கொண்டு உள்ளே புசிக்கிறாளே! என்னைமாத்திரம் இந்தத் துளி துணிக்கையோடே துரத்திவிடுகிறதா?

நாய்: ஆ! இது மிகக் கொடியது. சிறிதும் ஈவிரக்கமில்லாத கொடிய நெஞ்சர்களல்லவா இப்படிச் செய்வார்கள்! ஆய்ந்துபார்க்குமளவில் உலகில் அநேகர் இப்படித்தான் இருக்கின்றனர். ஏதோ தெரியாமையால் சமையற்காரி இந்தத் தடவை இப்படிப் பிசகு செய்தாலும், சாதாரணமாய் மற்றக்காலங்களில் உன்னிடத்தில் ஆதரவாயே இருப்பாளல்லா?

பூனை: அவளுடைய ஆதரவென்ன எனக்கு? காலாவிட்ட வேலையைத் தலையால் செய்யக் காத்திருக்கிற கூலிக்காரியேயொழிய அவள் வேறல்லவே! மற்றவர்களைப்போல என்னையும் உபசரிப்பது அவளுடைய கடமைதானே.

நாய்: (பூனை தன் உள்ளத்திற்கொண்ட கோபத்திற்குக் காரணத்தை வெளியிடுகிற தருணமாயிற்றெனத் தெரிந்துகொண்டு) ஆம், நீ சொல்வது உண்மையே.

பூனை: இவள் பணியாரப் பல்லாய் உறியில் உயர வைத்திருப்பது எனக்கு எப்படித் தெரியும்; நான் அதை உற்றுப்பார்த்தால் அதற்காக என்னை வெளியே அடித்துத் துரத்தி இப்படிப் பட்டினியாய்க் கொல்லுகிறதா?

நாய்: ஆ! இதென்ன விபரீதம்? இப்படிப்பட்ட கொடியசெய்கையும் செய்பவருண்டா? அந்தப் பல்லாயை நீ விழித்துப்பார்த்ததுமாத்திரந்தானே.

பூனை: அதிகம் ஒன்றுமில்லை; உறிக்கயிறு நைந்துபோயிருந்தால் அதுகூட என்னுடைய குற்றமா? என் கை பட்டமாத்திரத்திலே உறி அறுந்து கீழே வீழ்ந்துபோனால் நான் என்னசெய்கிறது?

நாய்: ஆயின் உன்மேல் குற்றமில்லை; உறி உறுதியாயிருக்கிறதா இல்லையாவென்று நீ அதைப் பார்த்தாயேயொழிய மற்றொன்றுமில்லையே!

பூனை: ஆம், அவ்வளவுதான்; மற்றொன்றுமில்லை. (என்று மிகப் பதைபதைப்பாய்ப் பேசிற்று.)

நாய்: உறி அறுந்து கீழே வீழ்ந்தது; அப்புறம்?

பூனை: அப்புறம் ஒன்றுமில்லை, வேடிக்கையாய் அந்தப் பல்லாயில் தலையை நுழைத்துப்பார்த்தேன்.

நாய்: அப்போது நீ அதைத் தின்னுமல் விட்டது எனக்கு வெகு ஆச்சரியமாயிருக்கிறது. அப்படிப்பட்ட அருமையான பொருளைக் கண்டு உருசிபாராதிருக்க யார்க்குத்தான் மனம் வரும்?

பூனை: (அதைக் கேட்டுத் தன் நாக்கை நுனைசிக்கொண்டு) ஆம் நீ சொல்வது வாஸ்தவமே. பொய் பேசுவானேன்? நான் அதை உருசிபார்க்க முயன்றதுண்டு. ஆயினும் அதினின்றும் ஒருவாயளவு எடுத்துக்கொள்வதற்குமுன் சமையற்காரி வந்துவிட்டாள். முழுதும் நான் அதைத் தின்றுவிட்டிருப்பேனென்றே நீயும் நினைப்பாய்? அவள் அப்படியே என்மேல் பழிகூறித் தடியாலடித்துச் சமையலறையினின்றும் என்னைத் துரத்திவிட்டாள்.

நாய்: (எதிரிலிருந்த பணியாரத்தையே பார்த்துக்கொண்டு) ஆ! கொடுமை கொடுமை, சகிக்கத்தக்கதன்று.

பூனை: இதுமாத்திரமேயா? பூனைதொட்ட பண்டத்தைப் புலையனும் புசியானேயென்று சொல்லிக் கூவினுள்.

நாய்: ஆ! இதென்ன அகங்காரம் பார்த்தாயா?

பூனை: அவ்வளவோடும் ஒழியவில்லையே! என்னைக் கொன்றுவிடுவதாகவும் பயமுறுத்தினுள்.

நாய்: ஆ! அப்படியா? அதைக் கேட்டதனுல் உண்டாகிய மனப்புண் ஒருநாளும் ஆருதே.

பூனை: அவள் செய்ததை நான் என் ஆயுளளவும் மறக்கமாட்டேன்.

நாய்: பெண்பிள்ளைதானே, அவளுக்கு அத்தனையாய்த் தெரியுமா? அவளுடன் பகைத்துக்கொண்டு என்னபயன்?

பூனை: பெண்ணுனலென்ன? தன் தொழிலைத்தான் செம்மையாய்க் கற்றுக்கொள்ளவேண்டியது எவர்க்கும் கடமையல்லவா? அவளுக்குச் சதிசெய்கிற வழி எனக்குத் தெரியும். அவள் இடுகிற உணவை நான் புசிப்பதில்லை. இப்படியே இரையெடாமல் உலர்ந்துகொண்டிருக்கிறேன். பிறகு நான் இளைத்துப்போயிருப்பதை என் யஜமானியும் மற்றவர்களும் காண்பார்களானுல் அப்போது யார் பழிக்குப் பாத்திரராகிறுர்களோ பார்ப்போம்.

நாய்: ஆ! இது வெகு நல்ல யோசனை; பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்பதற்காக நான் சொல்லவரவில்லை. தன் குற்றத்தைத் தான் நன்ருய்த் தெரிந்துகொள்ளும்படி அவளுக்கு அவசியம் செய்யவேண்டியதுதான். அவள் சமையல்வீட்டுக் கதவைத்திறந்துவைக்காதிருப்பாளானுல், நீ உள்ளே நுழையவும் அதன்மேல் இவ்வளவு அநர்த்தமெல்லாம் விளையவும் இடமிராதே. (என்று தன்முன் வீழ்ந்திருந்த பணியாரத்தை அதிக ஆசையோடு பார்த்துக்கொண்டே பேசிற்று.)

பூனை: ஆம், ஒன்றுமிராது.

நாய்: இப்படி ஆனதெல்லாம் அவளுடைய குற்றமாயேயிருக்க

அதற்குப் பதில் உன்னைத் திட்டி அடித்துப் பட்டினியாகவும் கொல்வது என்றைக்காவது நியாயமாகுமா?

பூனை: ஓ! இதற்கு வேறு வழியில்லை. நான் பட்டினியிருந்து தான் அவளைப் பாடுபடுத்தவேண்டும்.

நாய்: நானானால் அவள் இட்ட உணவைத் தொடவேமாட்டேன். அதை அப்படியே போட்டுவைத்து அவளுக்கு இன்னும் அதிகமான ஆக்கிரகம் உண்டாகச்செய்வேன்.

பூனை: நான்மாத்திரம் இதைத் தொடப்போகிறேனா?

நாய்: ஒருபோதும் தொடாதே. (என்று சொல்லி அதன்மேல் கொஞ்சம் அலக்ஷியமாய்) ஆயின் நான் எடுத்துக்கொள்ளட்டுமா?

அதைக் கேட்டுப் பூனை ஒன்றும் தோன்றாமல் பிரமித்துநின்றது.

அதுகண்டு நாய், ஏன் ஒன்றும் பேசாதிருக்கிறாய்? உன்னுடைய தீர்மானம் இப்படிப்பட்டதென்று உடனே அவளுக்குத் தெரிந்துவிட்டால் நல்லதென்பதற்காக நான் சொல்லுகிறேனேயொழிய வேறில்லை. எடுத்துக்கொள்ளலாமா? என்று சொல்லி அந்தப் பணியாரத்தின்மேல் மெல்ல ஒரு காலை வைத்தது. அதற்குப் பூனை ஒன்றும் தடைசெய்யாதிருக்கவே அதை வாயிற் கவ்விக்கொண்டு பூனை துரத்திக்கொண்டு ஓடிவரப்போகிறதென்ற திகிலினால் உடனே ஒரே ஓட்டமாய் ஓடிப்போய்விட்டது. தன் உணவை நாய் தூக்கிக் கொண்டு போனபிறகு, ஐயோ கைக்கு எட்டினதும் வாய்க்கெட்டவில்லையே என்று பூனைக்குப் பச்சாத்தாபம் உண்டாயிற்று. இனி அது என்னசெய்யமாட்டும்? அப்புறம் மறுநாள்வரையில் அதற்குச் சோறுபோடுவாரில்லை. எங்கேயாவது எலியைப் பிடித்துத்தான் பசியைத் தணித்துக்கொள்ளவேண்டியதாயிற்று. பிறகு இரண்டொருநாள்வரையில் அந்த நாய் பூனையின் எதிரில் வரவேயில்லை.

ஆகையால் நேசர்கள்போல வந்து நயமாய்ப் பேசி ரோஷத்தை மேன்மேலும் அதிகமாய்த் தூண்டி ஆடவிட்டு நாடகம்பார்ப்பவர்களைப் பெரிய பகையாளியாக நினைத்து அவர்களை விட்டு விலகவேண்டும்.

இந்துப்பெண்களுக்கேற்ற வீட்டுக் கல்விப்பயிற்சி.

(ஒரு உபந்நியாஸம்.)

இந்துக்களாகிய நமது பெண்களுக்கு வீட்டுக் கல்விப்பயிற்சி விஷயமாய் ஒரு பத்திரிகை எழுதும்படி சபையார் வேண்ட, அப்படியே அதிக பாரமான அவ்விஷயத்தை ஏற்றுக்கொண்டு இப்பத்திரிகை எழுதிப் படிக்கத் துணிந்ததைப்பற்றி மன்னிக்கும்படி இம்முதல்வாக்கியத்திலேயே வேண்டிக்கொள்ளுகிறேன்.

இந்த விஷயமோ அற்பமானதல்ல; ஒவ்வொருவருடைய இல்

வாழ்க்கையும் நல்வாழ்க்கையாவதற்கு முக்கிய சாதனமாயிருக்கின்றது. இதை உட்புகுந்து விசாரிக்குங்கால் பலவிதமான கேள்விகளும் ஆக்ஷேபங்களும் நவநவமாய் உதிக்கின்றன. அவைகட்கு இப்படித்தான் என்று நிச்சயமாய்த் தகுந்த சமாதானம் சொல்லவாவது, இன்னின்ன அம்சம் சந்தேகமறத் தீர்ந்துவிட்டது; இன்னின்ன அம்சம்மாத்திரம் பரிசீலனம்செய்யவேண்டியிருக்கிறது என்று வரையறுத்துச் சொல்லவாவது எவராலும் கூடாது. இவ்விதமான பெருத்த விஷயத்தை இப்போது கிடைத்திருக்கிற சொற்பகாலத்தில் எவ்வளவு சுருக்கமாய்ச் சொல்லப்புகுந்தாலும் சொல்லி முடிப்பது அசாத்தியம். ஆகையால் இப்போது ஒருவர் செய்யக்கூடியதெல்லாம் தம்முடைய அபிப்பிராயம் இப்படிப்பட்டதென்று எடுத்துச்சொல்லி, அவரவர்களுடைய அபிப்பிராயங்களை வெளியிடும்படி பிறரைத் தூண்டிவிடுவதுமாத்திரமேயாம்; கூடுமானால் பிறகு யாவருடைய அபிப்பிராயங்களையும் ஒன்றுசேர்த்துக் கடைசியாய்ப் பெண்கல்விப் பயிற்சி செய்விப்பதற்கு ஆதாரமான விதிகளை ஏற்படுத்திக்கொண்டு அதன்படி நடந்துகொள்ளலாம்.

வித்தியாப்பியாஸ விஷயத்தில் உண்மையான ஊக்கமுடையவர்கள், வெவ்வேறு கோட்பாடு உள்ளவர்களாயிருந்தாலும், பூமியில் ஜனிக்கும்போதே மனிதர்களுக்குக் கல்விப்பயிற்சி துவக்கவேண்டும்; பின்பு ஒருநாளும் அதற்கு முடிவில்லையென்னும் இவ்விரண்டு அம்சங்களில்மாத்திரம் அபிப்பிராய பேதமில்லாமலிருக்கிறார்கள். “தொட்டிவிடும்போதே குழந்தைக்குக் கல்விப்பயிற்சி துவக்க வேண்டும்” என்று ஒரு பெரியவர் சொன்ன நீதிச்சொல் நிச்சயமென்று நாளுக்குநாள் அனுபவத்தினாலேயே நாம் காண்கிறோம். சிசுக்களின் செய்கைகளை உன்னிப்பாய்ப் பார்ப்பவர்கள் அவர் மொழிந்தது வாஸ்தவமென்றே தெரிந்துகொள்வார்கள். குழந்தைகளுக்கு இவ்விதமான உணர்ச்சிகளை முதலில் உண்டுபண்ணவேண்டும், இவ்விதமான கருத்துகளைத் தோற்றுவிக்கவேண்டும் என்பதைப்பற்றியும், கல்வியைக் கற்றுக்கொடுக்கும் விதத்தைப்பற்றியும் ஒருவர்க்கொருவர் ஒருவேளை கருத்தில் வேறுபட்டாலும், கல்விக்கு ஆரம்பம் இன்னகாலம் என்பதைப்பற்றிமாத்திரம் யாவரும் ஒருமனப்பட்டவராயிருக்கிறார்கள். குழந்தை பிறந்தவுடன் எவ்வளவு சீக்கிரகாலத்தில் உணர்ச்சி உண்டாகிறது! எவ்வளவு சீக்கிரத்தில் இந்திரியங்களின் வியாபாரம் தொடங்குகிறது! பூமியில் பிறந்த சொற்பநாளைக்குள் கற்றுக்கொள்ளுகிற சங்கதிகள் அநேகம்; பிறந்த ஒரு வருஷத்துக்குள் குழந்தை எவ்வளவு விஷயங்களைக் கிரகிக்கிறதோ அவ்வளவு விஷயங்களைப் பிறகு ஒருகாலத்திலும் கிரகிப்பதில்லையென்று சொன்னாலும் சொல்லலாம். மிருதுவாயிருக்கும் போதே மெழுக்கை ஏற்றபடி உருவாக்குவதுபோலவும், நிலத்தில் ஈரம் உலர்ந்து உறுதிப்படுவதற்குமுன்னமே விதைவிதைப்பதுபோ

லவும் இளமையான மனது முற்றுவதற்குமுன்னமே விஷயங்களைப் போதிக்கவேண்டும்; ஆதலால் "இளமையிற்கல்" என்றபடி சிறுபிராயத்திலேயே கற்கப் புகவேண்டுமெனத் தெளிவாகின்றது. நல்லது, இப்படி இளமையில் ஆரம்பித்த கல்விக்கு முடிவு எங்கே என்பீர்களோ? நாம் அனுபவத்தில் கண்டபடி புருஷர்களுடைய படிப்புக்கு முடிவு என்பது கிடையாது; ஆயுளோடுகூடத்தான் அதுவும் முடிவு பெறுகிறது. ஏனெனில் நாம் இவ்வுலகத்தில் உயிரோடிருக்குமளவும் மாணுக்கர்போலக் கற்றபடியேயிருக்கிறோம். கற்கக் கற்க "கற்றதணுவளவு கல்லா துலகளவு" என்றபடி, தாம் கற்று அறிந்துகொள்ளாதது அபரிமிதமாயிருக்கிறதென்று தம்முடைய அஞ்ஞானத்தை மென்மேலும் அதிகமாய் உணர்வது முனிவர்முதலிய மகான்களுக்கும் சகஜம். ஒருவன் பாடசாலையில் படித்து நீங்கும்போது அவன் படித்தாகிவிட்டது என்று பலர் சொல்லக்கேட்கிறோம்; இதைவிடப் பிசகான கொள்கை வேறுண்டோ? பள்ளிக்கூடத்தில் நாம் தெரிந்துகொள்ளுகிறதெல்லாங்கூடிக் கல்விகற்கும்வழியைமட்டுமேயல்லது வேறல்ல; ஏனெனில், பாடசாலைப் படிப்பினுல் பண்பட்ட புத்திவலிமை மாத்திரம், நாம் வரவர அபிவிருத்தியடைந்து பிற்காலத்தில் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலுங்கூட முடிவுபெருத ஞானம் சம்பாதிப்பதற்கு சாதனமாகின்றதேயொழிய, அங்கே கற்ற சொற்பவித்தை சிறிதும் உபயோகப்படுவதில்லை.

இப்போது நாம் பேசப்புகுந்த பெண்கல்வி இத்தன்மையான முடிவற்ற கல்வியென்ற நோக்கத்துடனேயா இதுவரையில் நடத்திவந்தோம்? இல்லை. "பெண்கள் படித்துப் பிரயோசனம் என்ன? புருஷர்களைப்போல வெளியிலே போய்த் திரிந்து அலைந்து சம்பாதிக்கப்போகிறுர்களோ? புருஷன் கொண்டுவந்து போடுவதை வைத்துக்கொண்டு வீட்டிலேதானே உட்காந்திருக்கப்போகிறுர்கள்" என்று இவ்வாருகப் பிசகான எண்ணங்கொண்டு, ஆயிரக்கணக்காய்ச் செலவுசெய்து ஆண்பிள்ளைகளின் கல்விக்காகப் பாடுபடும் தனவான்கள் பலர் தங்கள் பெண்களின் விவேகவிர்த்தியைக் கவனிக்கிறதேயில்லை. இப்படிப்பட்ட குறுகிய புத்தியும் பரம்பரையான மூடத்தனமும் குடிகொண்டிருக்கும் ஆராய்ச்சியில்லாதவர்கள் நடத்தையைப்பற்றி இப்போது நாம் பேசத்தொடங்கினுல் அது மிகப் பெருகும். நல்லவேளையாய் இப்படிப்பட்ட நியாயசூன்னியமான பேச்சுகள் முன்போல இப்போது அவ்வளவு அதிகமாக நம்முடைய காதில் விழுகிறதில்லை; புருஷர்களின் படிப்பும் நாகரீகமும் விர்த்தியாக விர்த்தியாகப் பெண்களைப் படிப்பிப்பதனுல் விளையும் நன்மைகளும் அதிகமாய்ப் பிரகாசமாகின்றன. ஆகையாலே பிரகிருதத்தில் நாம் செய்யவேண்டிய காரியம் யாதெனில்,— இப்போது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பெண்கள் பாடசாலையில் சொற்பகாலம் படித்துப் பிறகு பாடசாலைக்குப் போகச் சரிப்படா

மல் படிப்பைத் திடீரென்று நிறுத்திவிட்டு வீட்டில் சும்மாவிருந்து விடுகிறார்களே, அப்படிப்பட்ட பெண்கள் பட்ட சிரமம் வீணாய்ப் போகாமல் மேன்மேலும் அவர்களுக்கு வித்தியாவிர்த்திசெய்வதும், தங்களுடைய பெண்களை முதலிலேயே பாடசாலைக்கு அனுப்பச் சம்மதமில்லாமல், வீட்டில் கற்பிக்கத்தக்க ஸ்திரீகள் யாராவது வந்து படிப்பித்தால் படிப்பிக்கலாம் என்றிருப்பவர்களுடைய மனோரதம் நிறைவேறுவதும் ஆகிய இவ்விரண்டுகாரியமும் கைகூடும்படி செய்வதற்கு என்னென்ன தேவை, என்னென்ன உபாயங்களை அனுசரிக்கவேண்டும், என்னென்ன குறைகளைத் தீர்க்கவேண்டும் என்பதைப் பற்றி யோசிப்பதேயாம்.

இவ்விஷயத்தைப்பற்றி இப்போது என்னுடைய அபிப்பிராயங்களைச் சொல்லத் துவக்குகிறேன். ஒருவன் தன் வாழ்நாளில் பயில வேண்டிய கல்விப்பயிற்சி பாடசாலையில் பயில்வதுமாத்திரமேயல்ல; அதைவிடச் சிறந்ததான மற்றொன்றுண்டு. அதாவது வீட்டுக் கல்விப்பயிற்சியாம். இது பள்ளிக்கூடத்துப் படிப்புக்கு முன்னாலேயே துவக்கமாகி அது ஓய்ந்தபிறகும் ஓயாமல் அதைவிட மேலான பயன்களை விளைவிக்கும் முக்கிய ஸாதனமாக நிற்கிறது. தாய் தந்தையர்களும் மற்றவர்களும் உபதேசிக்கின்ற உபதேசங்களைக் கேட்டும், நடத்திக்காட்டுகிற நிதர்சனங்களைப் பார்த்தும் பிற்காலத்தில் தாங்கள் செய்யவேண்டிய வேலையின் ஒழுங்கைப் பெண்கள் தெரிந்துகொள்ளுகிறது வீட்டிலேதான்; தாய்மார்க்குரிய காரியங்களையும் கடமைகளையும் பெண்கள் கற்கப்பழகுவதும் வீட்டிலே தான்; பிறகு வயதுவந்து உலகத்தாருடன் கூடிவாழும் யுவதிகளுள் ஒருத்தியாயாவது ஒரு வீட்டுக்கு யஜமானியாயாவது ஆகும் காலத்தில் அனுசரிக்கவேண்டிய ஒழுக்கங்களைத் தெரிந்துகொள்வதும் வீட்டிலேதான். ஒருநாள் அறுபதுநாழிகைக்குள் நாம் என்னென்ன வேலைகள் செய்கிறோமென்று நிதானித்துப் பார்த்தால் அவற்றுள் முக்கியமானவை வெகுவாய் வீட்டில் கற்றுக்கொண்ட காரியங்களாகவேயிருக்கின்றன. இவ்விதமான வீட்டுப்படிப்புக்குச் சமானம் ஒருநாளும் பள்ளிக்கூடத்துப் படிப்பு ஆகமாட்டாது. ஏனெனில் முன்னது இயற்கையாகவே தன்னையும் அறியாமல் கற்றுக்கொள்ளுகிற கல்வியாம். அது வாய்மொழியாலேமாத்திரம் கற்கிறதல்ல, அதற்கென்றே கடவுள் நமக்கு அளித்திருக்கிற இந்திரியங்கள் மூலமாயும் உணர்ந்து அறிந்துகொள்வது. பின்னையும் 'குலவித்தை கற்றுப்பாதி கல்லாமற்பாதி' என்கிறபடி வீட்டில் தாய்தந்தையர்களுடைய அன்பான சிக்ஷையினால் சிறுபிராயத்திலேயே வீட்டுவேலைகளில் சிறிதும் வருத்தம்தோன்றாமலே நன்றாய்ப் பழக்கமுண்டாகி, இல்வாழ்க்கைக்கு ஏற்ற ஒழுக்கங்களிலும் நாளுக்குநாள் கிரமமாக அப்பியாசம் முதிர்ந்து, தங்களுக்கு உசிதமான நடையுடைபாவனைகளும் இன்னவென்று பெண்களுக்குச்

செம்மையாக மனதில் பதிந்துவிடுகின்றன; இந்தப் பெரியலாபம் பள்ளிக்கூடத்துப் படிப்பினுல் ஒருபோதும் உண்டாகமாட்டாது.

'எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்' என்கிறபடியே வீட்டிலாயினும் பள்ளிக்கூடத்திலாயினும் முதல்முதல் அப்பியசிக்க வேண்டியது எழுதவும் படிக்கவும் கணக்குப்போடவுமேயாம். ஆனுல் இம்மூன்றையும் சிறிதளவு அப்பியசித்து நிறுத்திவிட்டால் உபயோகமில்லாமற்போகும்; உபயோகமின்மையோடுங்கூடத் தீமையும் விளையும்; எப்படியென்றுல் அரைகுறைப் படிப்பானது வீணுன அகங்காரத்தை உண்டுபண்ணி, சுத்தமாகப் படிக்காத மூடனைப்போல வேலைக்கு எவ்வளவும் உதவவொட்டாமல் கேவலம் பூமிக்குப் பாரமாக முழுச்சோம்பேறியாக்கிவிடும்.

பத்துப் பன்னிரண்டுவயதுக்குமேல் பெண்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவது நம்முடைய தேசாசாரத்துக்கும் சம்பிரதாயத்துக்கும் விரோதமாயிருத்தல்பற்றி அவ்வளவு சிறுவயதிலேயே பள்ளிக்கூடத்தை விட்டுவிடவேண்டியதாயிருப்பதால், நமது பெண்கள் கல்வியில் தக்கபடி தேர்ச்சியடைவது கூடாமையாயிருக்கிறது. சொற்பகாலம் பள்ளிக்கூடத்துக்குப் போய்வருவதனுலேயே பிறகு பிறருதவியின்றித் தாமாகக் கல்வியை அபிவிர்த்தி செய்துகொள்ளும்படியான ஞானமும் வல்லமையும் உண்டாகாதே. பள்ளிக்கூடத்தில் இப்போது செய்துவருவது என்னவென்றுல், கொஞ்சம் எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்துத் தையல் வேலையிலும் ஒருவாறு பழக்கிவைக்கிறுர்கள். வித்தியாரம்பத்துக்கு இது போதுமென்பது மெய்தான்; ஆயினும் நமது பெண்களுக்குப் பிற்காலத்திலும் இது போதுமா? எந்தக் கருத்தை உத்தேசித்துப் பெண்கள் படிக்கவேண்டுமென்கிறுேமோ அந்தக் கருத்து இதனுல் நிறைவேறினதாக ஆகுமோ? தமிழும் தெலுங்கும் எழுத்துக் கூட்டிப் படிப்பதும் கொஞ்சம் தையல்வேலையுந்தானு பெண் கல்வியின் புருஷார்த்தம்? நம்மைப்போலவே நமது ஸ்திரீகளும் விவேகத்தில் முதிர்ந்து பற்பல கிரந்தங்கள் படித்து ஞானனந்தத்தை ஏன் அடையக்கூடாது? இப்போது நமது ஸ்திரீகள் கிரந்தங்களை எடுத்துப் படிக்கச் சக்தியற்றவர்களாயிருந்தாலும் புத்திகூர்மையும் ஞாபகசக்தியுமில்லாதவர்களல்ல. கடவுளைப்பற்றின ஸ்துதிகளும் குணவர்ணனைகளும் நீதிநெறி முறைகளும் அகராதிக்கிரமமாய் அமைக்க[illegible] விதம்விதமான [illegible]டல்களை [illegible] புத[illegible] [illegible] பரையாக வாய்மொழியாலேயே ஒருவரிடத்திலிருந்து ஒருவர் கிரகித்துக்கொண்டு ஏழு எட்டு வயதுப் பெண்கள்கூட அனுயாஸமாகப் பாடுகிறுர்களல்லவா? ஒவ்வொருசமயத்தில் மிகவும் நியாயமாகவும் நுட்பமாகவும் சங்கதிகளை எடுத்துக்காட்டும் திறமையுள்ள பத்தினிமார்களைப்பெற்ற புண்ணியசாலிகள் இல்லையா? விவேகமான புத்திமதிகளைச் சொல்லிப் பிள்ளைகளைச் சீர்திருத்தத்தக்க யோக்கியதை

யுள்ள தாய்மார்கள் இல்லையா? சாதுரியமாகச் சம்பாஷிக்கிற சக்தியும் சமயத்துக்குத் தக்கபடி சமத்காரமாய்க் கேள்விக்கு மறு உத்தரஞ் சொல்லுகிற சாமர்த்தியமும் நமது ஸ்திரீகளுக்கு உண்டு. இதெல்லாம் குறைவின்றியிருக்க ஒழுங்கான படிப்பும் சேர்ந்துவிட்டால் ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல நமது ஸ்திரீகளும் மேம்பாடு பெறுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. முற்காலத்தில் சிறந்த கவிகளாகவும், நியாயசாஸ்திரத்தில் மிக்க வல்லவர்களாகவும், கடினமான கணிதசாஸ்திர ககோளசாஸ்திரங்களில் ஆழ்ந்த ஞானமுள்ளவர்களாகவும் ஸ்திரீகள் இருந்தார்களென்று சரித்திரத்தினால் தெளிவாய்த் தெரியவருகிறபடியால், இந்தத் தேசத்திலேயே பெண்கல்வி அதிகப் பிரபலமாக விளங்கின காலமும் உண்டு என்பது நிச்சயமாகிறது. ஸ்திரீதர்மங்களைப் பாதுகாப்பதிலும் நமது ஸ்திரீகள் அந்நியதேசத்து ஸ்திரீகளுக்குக் குறைந்தவர்களல்ல. குடும்பகாரியங்களில் பணிந்து நடத்தலே பெண்டிர்க்கு அழகு என்று நினைத்துக்கொண்டு தங்களுடைய சௌக்கியத்தைக் கொஞ்சமேனும் பாராட்டாமல் விசுவாசத்துடனே மற்றவர்களுக்கு உபசாரம் முதலியவைசெய்து அவர்கள் சௌக்கியமடைந்தால் தாங்கள் சௌக்கியமடைந்ததுபோலப் பாவிக்கும் குணம் சிரேஷ்டமான குணமல்லவா? இந்த குணத்தில் நமது ஸ்திரீகளை மிஞ்சினவர்கள் ஒரு தேசத்திலும் ஒரு ஜாதியாரிலும் இல்லை. இத்தேசத்தில் உடன்கட்டையேறுவதென்கிற ஆசாரம் இருந்ததே! அதற்கு எவ்வளவு வைராக்கியமும் மனோதிடமும் வேண்டும்? இப்போதும் கைம்பெண்டிர்கள் அநேகர் நம்முடைய பிராப்தம் இத்தான் என்று நிச்சயம்பண்ணிக்கொண்டு உலகவாழ்க்கையின் இன்பங்களைச் சீயென்று துறந்துவிட்டுத் தெய்வமேகதியென்று கலக்கமின்றிக் காலத்தைக் கழிக்கிறார்கள். இப்படிப்பட்ட தேசத்தில் ஸ்திரீகுணங்கள் சிறந்தனவென்பதை ஸ்தாபிக்க அஞ்சவேண்டியதில்லை.

இப்போது இத்தேசத்தில் பெண்கல்வியைப் பிரபலப்படுத்த வேண்டுமென்ற விருப்பமுடையவர்கள், இத்தன்மையான முற்காலத்து நிலைமையையும், இராமாயணத்தில் சொல்லியபடி, கல்விப் பயிற்சிசெய்து சுயம்வரமாக மணம்புரிந்து கொஞ்சகாலம் ராஜபோகம் அனுபவித்துப் பின் கணவனுடன் வழிதுறை தெரியாத அகோரமான காட்டுக்குள் சென்று வெகுகாலம் அங்குமிங்கும் [illegible], தனிமையாக இருக்க நேர்ந்த ஒருகாலத்தில் கொடியராக்ஷஸனால் அபகரிக்கப்பட்டு இலங்கைத்தீவில் பத்துமாசகாலம் ஓர் மரத்தடியில் காலம்போக்கி மனங்கலங்காமல் ராக்ஷஸனை ஒரு துரும்பாக நினைத்து, கடைசியாக ஜெயகாலம் கூடினபின் தன் நாயகனுடன் சிங்காசனத்தில் வீற்றிருந்து எத்தனையோ அற்புதமான குணாதிசயங்களைப் பிரகாசிப்பித்து உத்தமஸ்திரீயாக விளங்கின சீதையைப்போலொத்ததெய்வத்தன்மையுள்ள பெண்களின் வரலாற்

றையும் கவனித்து, இப்போது அம்முன்னோர்களுடைய ஒழுக்கங்களையே மேல்வரிச் சட்டமாகக் கொண்டிருக்கும் சாதாரண ஜனங்களுடைய அபிமதத்தை அனுசரித்துப் பெண்கல்வியை விஸ்தரிப்பிக்கப் பாடுபடுவோமேயானால், மகம்மதியர்கள் படையெடுப்பதற்குமுன் வரையில் இந்தத் தேசத்தில் பெண்கல்வி எந்தநிலைமையிலிருந்ததோ அந்த நிலைமையை அடைவது அசாத்தியமன்று. இந்துஸ்தானத்தின் சுவர்ணமயமான ஆலயங்களையும் ஐசுவரியமுள்ள நகரங்களையும் கொள்ளையடிக்கவேண்டுமென்று குஜனிமகம்மது என்னும் சூரன் சண்டமாருதம்போலப் புறப்பட்டுப் படைகளுடன் பலதரம்வந்து சென்றவழியெல்லாம் பாழாக்கி ஊர் ஊராகக் கொளுத்தி இம்சை செய்தகாலம்வரையில் இத்தேசத்து ஸ்திரீகள் புருஷர்களால் நன்கு மதிக்கப்பட்டுச் சுகமாகவும் கௌரவமாகவும் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அந்தக் கொடிய வீரன் எந்தவேளையில் இந்துஸ்தானத்தில் கால்வைத்தானோ அதுமுதலே இத்தேசத்தின் துரைத்தனமும் குடித்தனமும் தாறுமாறாய் நிலைகுலைந்துபோய்விட்டன. சுகமாகக் குடியிருந்தவிடங்களிலெல்லாம் திடீரென்று எங்கேபார்த்தாலும் சண்டையும் கூச்சலும் கொள்ளையும் உபத்திரவமும் பரவிப்போயின. யுத்தசின்னமான மேகங்கள்சூழ்ந்து தேசம் இருள்அடைந்தது; கடைசியாக யுத்தமாகிய புயல்தோன்றி எத்தனையோகாலமாய் நிலைபெற்றிருந்த ஏற்பாடுகளையெல்லாம் நிர்மூலமாக்கி அடித்துக்கொண்டுபோய்விட்டது. ஜனங்கள் பிராணனைவிடமாட்டாமல் பிழைத்திருந்தார்களேயன்றி வேறில்லை. உலகவியாபாரத்தில் விரக்தியடைந்து ஏகாந்தமான காடுகளில் தெய்வத்தியானம் பண்ணிக்கொண்டிருந்த முனிவர்களும் மஹாத்துமாக்களும்கூடத் தத்தமிடங்களைவிட்டு ஓடிப்போகும்படியாயிற்று. ஏற்கனவே அடக்கம் ஒழுக்கமுள்ள இத்தேசத்து ஸ்திரீகள் அப்படிப்பட்ட அராஜகமானகாலத்தில் நீதியற்ற கொடியர்களுடைய உபத்திரவங்களுக்கும் பலாத்காரங்களுக்கும் தப்பித்துக்கொள்ளுவதற்காகப் புருஷர்கண் படாத ஏகாந்த ஸ்தலங்களைத் தேடும்படியாயிற்று. இப்படி வெளியிலே நடமாட்டமே இல்லாமல் பயத்தால் பூட்டும் தாப்பாளுமாய் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்த அந்தக்காலத்தில் கல்விப் பயிற்சி நின்றுபோனது ஆச்சரியமல்ல. மகம்மதியர்களுக்குப் படிப்புயென்றால் ஆகாது. ஜெங்கிஸ்கான் என்கிற மகம்மதிய அரசனுக்கு எழுத்து இன்னதென்று தெரியாது. இந்தக்காலத்திலும் கூடக் கையெழுத்து எழுதத்தெரியாத ராஜாக்களும் சிற்றரசர்களும் இருக்கிறார்கள். 'அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி' என்கிற வசனப்படி ராஜாக்களே படிப்பை வெறுக்கிறவர்களாயிருந்தால் அவர்களுடைய தயவை அபேட்சிக்கும் குடிகளுடைய கல்வி க்ஷீணதசையை அடைவது ஆச்சரியமல்லவே! புருஷர்களுடைய வித்தியாவிருத்தியே இந்தக் கதியானால் ஸ்திரீவித்தையைப்பற்றிக்

கேட்கவேண்டுமோ? இப்படியாகப் பெண்கல்வி மகம்மதிய அரசாட்சியின் ஆரம்பத்தில் முறிபட்டு வரவரச் சுத்தமாக அற்றுப்போய்ப் பெண்மடைமை தோன்றி, அதனால் விளையும் தீமைகளை இப்போது நாம் அனுபவிக்கிறோம். இப்போது இந்தச்சென்னைச் சபையாரும் மற்றவர்களும் செய்யவேண்டிய காரியமாவது, இப்படி அதோகதியாய்ப் போன பெண்கல்வி மறுபடி தலையெடுக்கும்படி முயல்வதேயாம். அதைச் செய்யவேண்டிய விதமாவது, சற்று எழுதப் படிக்கச் சொல்லிக்கொடுப்பதுமாத்திரமேயன்று; அவர்களுடைய பெண்தன்மைக்குத் தக்கபடியும், அவர்களுக்கென்று ஏற்பட்டிருக்கிற கடைமைகளுக்கு இசைந்தபடியும் பூர்வகாலத்தில் நடந்துவந்த கல்விமார்க்கத்தைப் புதுப்பிக்கவேண்டும். 'மகம்மதுவினிடத்திற்கு மலை வாராமற்போனால் மலையினிடத்துக்கு மகம்மது போகவேண்டும்' என்று மகம்மதியர் சொல்வதுபோல, பெண்கள் பகிரங்கமான பள்ளிக்கூடத்துக்குப் போக அஞ்சினாலுஞ் சரி, சில நாள் போய் அப்புறம் நின்றுவிட்டாலுஞ் சரி, அவர்கள் இருக்குமிடத்திலேயே கல்விகற்பிக்கும்படியான உபாயத்தைத் தேடவேண்டும்; அந்த உபாயமானது அதிக திரவியச் செலவுக்கு இடமில்லாமலும், காரியத்திலும் குறைவுபடாமலும், இந்துப்பெண்களுக்கு ஏற்றபடி விவேகமும் நற்புத்தியும் நற்குணமும் நற்செய்கையும் அமைந்து குடித்தனம்பண்ணும்படியான யோக்கியதை உண்டாக்கத்தக்கதாயும் இருக்கவேண்டும்.

ஆகையாலே இந்த அவசியமான பெருங்காரியத்தைச் சாதிப்பதற்குத் தேவையான மனுஷிய சாமக்கிரிகளும் கருவிகளும் இவையென்பதையும், கூடியவரையில் அனுசரிக்கவேண்டிய ஏற்பாடுகள் இவை என்பதையும் என்னுடைய சக்திக்கு எட்டினவரையில் அடியில் குறிக்கக் கருதுகிறேன்.

பெண்களைப் படிப்பிக்க நன்றாய்ப் பயின்ற பெண் உபாத்தியாயிகள் இத்தேசத்தில் கிடையாமை நெடுநாளாய்ப் பெருங்குறையாயிருக்கின்றமையால் அவ்வுபாத்தியாயிகளைத் தேடிக்கொடுப்பது முதற்காரியம். அவர்கள் போதனாசக்தியில் பயின்றவர்களாகவும் ஹிந்துமதஸ்தரான குலமகளிராகவும் இருக்கவேண்டும். புருஷ உபாத்தியாயர் எவ்வளவு ஸமர்த்தர்களாயிருந்தாலும் பெண்களுக்கு ஏற்ற கல்விப்பயிற்சி செய்விக்கத் தக்கவராகார்கள். புருஷனால் புஸ்தகப்படிப்பைமட்டும் ஒழுங்காகச் சொல்லிக்கொடுக்க முடியுமேயன்றி வேறொன்றும் முடியாது. பெண்களுக்குத்தக்க வயது வந்தபிறகு இனத்தாரோடு இணங்கி இன்னமாதிரியாக நடக்கவேண்டுமென்பதைத் தன்னுடைய சொந்த அனுபவத்தாலே முன்னதாகத் தெரிந்துகொண்டு அந்தப்படி பழக்கிவைக்க ஸ்திரீ உபாத்தியாயியாயிருந்தால்மாத்திரமே சாத்தியப்படும். அன்றியும் பூததயை பச்சாத்தாபம், மட்டு மரியாதை, பெண்பாலார்க்குரிய ஒழுக்கம்,

திவ்வியாபரணமென்னத்தக்க சாந்தகுணம், அடக்கம், நாணம் முதலான நற்குணங்களல்லவோ பெண்களைச் சிறப்பிக்கின்றவை? இப்படிப்பட்ட இனியகுணங்களைக் கற்பிக்கப் புருஷனாலே எப்படி முடியும்? ஆகையாலே ஸ்திரீ உபாத்தியாயிகளைப் பழக்குவதற்காக அங்கங்கே தகுந்த இடங்களில் கூடியவரையில் போதனாப்பியாஸ பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டுவது அவசியம். துரைத்தனத்தார் சுதேசிகளுடைய வேண்டுகோளின்மேல் தயவு செய்து சென்னபட்டணத்தில் ஒரு ஸ்திரீ போதனாப்பியாஸ பாடசாலையை ஏற்படுத்திப் பரிபாலித்துவருகிறார்கள்; அதில் இதுவரையில் உண்டாயிருக்கிற பயனும் இனி உண்டாகப்போகிற பயனும் நமக்கெல்லாம் தெரிந்திருக்கிறது. ஆகிலும் இந்த ஒரு பாடசாலை இந்த ராஜதானி முழுவதுக்கும் போதாதாகையால், துரைத்தனத்தாருடைய ஒத்தாசையையே முற்றும் எதிர்பாராமல் அதற்குத் துணைக்கருவியாகத் தமிழ் மாகாணங்களிலும் தெலுங்கு மாகாணங்களிலும் சௌக்கியமான ஸ்தலங்களில் ஜனங்கள் சொந்த முயற்சியினால் சுதேச பாஷாபோதனாப்பியாஸ பாடசாலைகள் இன்னும் அநேகம் வைத்து ஸ்திரீ உபாத்தியாயிகளைப் பழக்கவேண்டும்; அப்படிச் சுதேசிகளுடைய சகாயமும் கூடியிருந்தாலல்லது சீக்கிரத்தில் காரியம் பூரணமாகக் கைகூடுவது கஷ்டஸாத்தியமாம்.

இப்படி யோக்கியமான குலஸ்திரீகளாகிய உபாத்தியாயிகளைச் சம்பாதிக்கவேண்டியது முதற்காரியம். பிறகு சிறுமிகளுக்குப் படிப்படியாகச் சொல்லிக்கொடுக்கத் தகுதியான புத்தகங்களை எவ்விதமாயாவது சேகரித்துக் கொடுப்பது இரண்டாவதுகாரியம். அப்புத்தகங்கள் நன்மைகளைப் போதிக்கத்தக்க பற்பலவிஷயங்கள் அடங்கி, படிக்கும்போது வருத்தம்தோன்றாமல் இன்பமாகவும் தெளிவாகவும் விஷயங்களை விளக்கி, புத்திவிகாசமும் உண்டுபண்ணத்தக்கின புத்தகங்களாக இருக்கவேண்டும். இதற்காக இப்போது இருப்பவைகளை முற்றிலும் தள்ளிவிட்டுப் புதிய கிரந்தங்கள் எழுதவேண்டுமென்பதில்லை; பெரும்பாலும் இப்போது இருக்கிற புத்தகங்களிலிருந்தே பாடங்களைப் பொறுக்கி, சுருக்கவேண்டியவைகளைச் சுருக்கிப் பெருக்கவேண்டியவைகளைப் பெருக்கித் தக்கபடி மாற்றி ஒழுங்குபடுத்திச் சிறுமிகள் கிரகிக்கும்படி எளிதான நடையில் மாத்திரம் அமைத்தால் போதும். விவேகம் உண்டாக்கும்படியான புத்தகங்கள் நமது சுதேச பாஷைகளில் கிடையாதென்றும் நமது ஸ்திரீகளுடைய மடைமையாகிய நோய் தீருவதற்கு இங்கிலீஷ்பாஷைதான் தக்க ஔஷதம் என்றும் சிலர் நினைக்கிறார்கள்; நான் அப்படி நினைக்கவில்லை. எல்லாவற்றிற்கும் நமது சுதேசபாஷைகளே போதுமானவை. ஏதாவது சில விஷயங்களைப்பற்றி நம்முடைய பாஷைகளில் இப்போது கிரந்தங்கள் இல்லாவிடினும் அவைகளைப் புதிதாக எழுதிக் கொள்ளலாம்; இருக்கிறவைகளில் ஏதாவது மாற்றவேண்டுமானா

லும் மாற்றிக்கொள்ளலாம். தமிழாவது தெலுங்காவது படித்த பிறகு இன்னொரு பாஷையைக் கற்க எந்தப் பெண்களுக்காவது அவகாசமும் இச்சையும் இருந்தால் அப்போதும் சுலபமாய்க் கற்றுக் கொள்ளக்கூடாத அன்னியபாஷையை அபேட்சிக்கவேண்டுவதில்லை; நம்முடைய தாய்பாஷையாகிய ஸமஸ்கிருதத்தைப் படிக்கட்டுமே. ஸத்தியம், பெற்றோர் பெரியோரிடத்தில் பக்தி, சிறியோரிடத்தில் அன்பு, பதிவிரதாதர்மம், புருஷனுக்குத் தன் தருமபத்தினியினிடத்தில் மாறாத விசுவாசம், ஸ்வஜனரக்ஷணம், பொறுமை, தைரியம், மனவுறுதி, அஹிம்சை, ஸர்வப்பிராணிகளிடத்திலும் சமபுத்தி முதலான சற்குணங்களை வெகு அழகாக உதாகரித்து எடுத்துக்காட்டும் மனோரஞ்சகமான இராமாயணம்போன்ற அளவற்ற கிரந்தங்கள் ஸமஸ்கிருதபாஷையில் இருக்க இங்கிலீஷைத் தேடுவது ஏன்?

ஸ்திரீகளுக்கு விவேகத்தையும் ஞானத்தையும் ஊட்டவேண்டுமென்றிருந்தாலும் அதற்காக நாம் அவர்களுக்கு இயற்கையாயுள்ள வரம்பை மிஞ்சி நடக்கக்கூடாது. அவர்களுடைய பெண்தன்மையையும் கடவுள் பெண்பிள்ளைகளைச் சிருஷ்டித்தது இன்னதுக்காக என்பதையும் கவனிக்கவேண்டும். புருஷர்களைப் படிப்பிப்பதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறோமோ அந்த ஏற்பாடுகளின்படியே ஸ்திரீகளைப் படிப்பிப்பதும், அந்தப் புத்தகங்களையே இவர்களுக்கும் உபயோகப்படுத்துவதும், வெகுமானமும் யோக்கியதாபத்திரிகையும் பெறும்பொருட்டு அதே பரீக்ஷைகளை இவர்களுக்கும் வைத்து நிர்ப்பந்தப்படுத்துவதும் பிசகு. கொக்குக்கு ஒன்றே மதி என்பதுபோல ஆண் பெண் இரண்டையும் ஒரேமாதிரியாகப் பாவித்து நடத்துவது அயுக்தம். பரீக்ஷை தேறி வெகுமானம் பெறுவது தானா பெண்கள் படிப்புக்குப் பிரயோசனம்? பரீக்ஷை பரீக்ஷை என்று பைத்தியம் பிடித்துத் திரிவதனால் பெண்களுடைய உண்மையான படிப்புக்குக் கெடுதியுண்டாகிறதென்பதைப் பெற்றோர்கள் அநேகர் உணராமலேயிருக்கிறார்கள். "இந்தக் காலத்தில் படிப்பது அறிவு சம்பாதிப்பதற்காகவல்ல, பரீக்ஷை கொடுப்பதற்காகவே; ஆகையால் பரீக்ஷைமாத்திரம் கொடுத்துவிட்டு ஒன்றும் அறியாதவர்களாகவே நிற்கிறோம்" என்று ஒரு வித்துவான் பரிகாசமாய்ச் சொன்னது வாஸ்தவமாகவேயிருக்கிறது.

[illegible]து தேசத்து ஸ்திரீகள் கல்வியை அபாரமாகக் கற்றுத் தத்துவ சாஸ்திரிகளாகவும், கணிதசாஸ்திரத்தில் நடைகணக்கு என்று சொல்லும்படியான நிபுணர்களாகவும் பிரசித்திபெறவேண்டுமென்று முயற்சிசெய்வதைப் பார்க்கிலும் பெரும்பிழை வேறொன்றுமில்லை. இங்கிலீஷ் கவிகளுள் உத்தம கவியான ஷேக்ஸ்பியர் பெருமையைப்பற்றி எழுதும்பொழுது "சிலருக்கு எத்தனமின்றியே பிறப்போடு பெருமை வந்துவிடுகிறது; சிலர் தாம் பிரயாசப்பட்டே பெரு

மையைச் சம்பாதிக்கின்றனர்; சிலர்க்குப் பிறர் பலாத்காரமாய்ப் பெருமையுண்டாக்குகின்றனர் என்கிறார். கல்வியும் அத்தன்மையதுதான். சிறுபிள்ளைகளுக்குப் படிப்பு சீக்கிரமாக வந்துவிட வேண்டுமென்று அநேகர் துரிதப்படுவதைப் பார்க்கிறோம்; ஒரு பூவை மெல்ல மெல்லச் செடிக்குத் தண்ணீர்வார்த்துச் செழுமையாக்கித் தானாகவே மலரும்படி செய்வதைவிட்டு அதை அவசரப்பட்டுக் கிள்ளிப்பார்ப்போமாயின், பிறகு அதினின்றும் பழம் உண்டாகுமென்று எதிர்பார்க்கலாமோ? புத்தியாகிய பூவும் அப்படிப்பட்டதுதான். தானாக விகஸிப்பதற்குமுன்னமே புத்திவிகாஸமாகவேண்டுமென்று முயல்வோமாயின் அதுவும் ஒரு பயனையும் தராது. சிறுவர்களுக்குப் போதிக்கும்போது ஒவ்வொரு விஷயமாய் இங்கே துளி அங்கே துளியாகப் படிப்படியாய்க் கற்பிக்க வேண்டுமென்பதை மறந்து, வெகுசீக்கிரத்தில் விருத்திக்கு வர வேண்டுமென நினைத்து அவர்களுடைய புத்தி எவ்வளவு சுமக்குமோ அதற்கு அதிகமான சுமையை ஏற்றிப் புத்தி தளிர்க்கவொட்டாமல் இந்தக் காலத்தில் அநேகர் தடுக்கிறார்கள். இதைவிட விபரீதம் வேறென்ன? கல்வி கற்பதில் எவ்வளவுதூரம் மேற்போக வேண்டுமானாலும் இத்தேசத்து ஸ்திரீகளுக்குச் சக்தியுண்டு; எவ்வளவு கடினமான சாஸ்திரங்களையும் அப்பியசிக்க வல்லமையும் உண்டு; ஆனாலும் குடும்பதர்மங்களை யோசிக்குங்கால் அவர்கள் எப்போதும் புஸ்தகமும் கையுமாய் உட்கார்ந்திருப்பது நியாயமல்ல. ஆகாசத்தில் கிரககதிகளைப்பற்றிச் சொல்லும் கணிதசாஸ்திரப்பயிற்சி ஸ்திரீகளுக்கு ஏன்? வீட்டில் மிதம்மிஞ்சின செலவு செய்து புருஷன் அநியாயமாய்க் கடனில் முழுகிப்போகாதபடி பார்த்துக்கொள்ள எவ்வளவு கணக்குகள் தெரியவேண்டுமோ அவ்வளவு தெரிந்தால் போதாதா? ஆகையால் கணித ககோளசாஸ்திரங்களிலும் இன்னும் மற்ற சாஸ்திரங்களிலும் நமது ஸ்திரீகள் பாஸ்கராசாரியர்முதலான பூர்வகாலத்துப் பண்டிதர்களைப்போலப் பாவலாராகவேண்டுமென்று நாம் முயல்வது அவசியமன்று. கணித சாஸ்திரத்தில் நிகரற்ற வல்லமைபொருந்திய பலநூற்றாண்டுகளாய்க் கீர்த்திபெற்று விளங்கின ஒரு லீலாவதியே நமது தேசத்துக்கெல்லாம் போதும்; அப்படிப்பட்ட லீலாவதிபோன்ற இன்னொரு ஸ்திரீ இத்தேசத்தில் இனி ஒருகால் தோன்றினாலும் தோன்றக்கூடும். அதுவேயன்றி இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு ஒருதரமாவது ஒரு அற்புதமான உத்தமஸ்திரீ உண்டாகவேண்டுமென்று நாம் பிரயத்தனப்பட்டு அதற்குத் தக்கபடி நமது பெண்களைக் கற்பிக்கவேண்டுமென்பதில்லை. அன்றியும் நமது நாட்டில் பாரம்பரையாக அனுஷ்டானத்தில் வந்துகொண்டிருக்கிற நீதிநெறிகள் அதிகமான படிப்பினால் ஒருவேளை தவறினாலும் தவறிப்போகக்கூடும்; அதிகமான படிப்பினால் தந்தமக்கு எப்படி புத்தி போகிறதோ அப்

படியெல்லாம் நடக்கும்படியாயுமிருக்கும்; ஆகையால் எல்லாவற்றையும் யோசிக்கும்போது ஸ்திரீகள் அளவுகடந்த படிப்பில் ஆசை வைக்காமலிருப்பதே நன்மையெனத் தெளிவாகின்றது.

கல்வியை விசேஷமாகக் கற்றுப் புத்திவலிமையால் ஆகுங்காரியங்களைச் செய்ய நமது தேசத்தில் புருஷசிங்கங்கள் யதேஷ்டமாக இருக்கிறார்களாகையால் அதற்காகப் பெண்பிள்ளைகளை ஏன் வருத்தவேண்டும்? பெண்களுக்குக் கல்வியினால் ஆகவேண்டியது எவ்வளவென்றால், புருஷர்க்கு ஆபத்து சம்பத்துகளுக்கு ஒத்த துணையாகவும், பிள்ளைகளுக்கு நற்புத்திபோதிக்கின்ற தாயாகவும், சூட்சுமபுத்தியும் புருஷனிடத்தில் பக்திசிரத்தையும் உள்ள தருமபத்தினியாகவும் வீட்டுவேலையில் செட்டும் சீர்மையுமுள்ள யஜமானியாகவும் செய்விக்கவேண்டுவதேயாம். புருஷனுக்குச் செல்வாக்கு உள்ளபோதுமாத்திரம் அவன் சொல்லுக்கு இரண்டில்லையென்று நடந்து, கொஞ்சம் சறுக்கினவேளையில் முகத்தைச் சுளித்துக்கொண்டு அலட்சியம்பண்ணுதபடி என்றும் ஒரேமாதிரியாக, நமது தேசாசாரத்துக்கும் நாகரீகத்துக்கும் அடுத்த சன்மார்க்கங்களை அறிந்து, இங்கித புத்தியுடனும் விசுவாசத்துடனும் புருஷனிடத்தில் நடந்துகொள்ளத்தக்கவளாகச் செய்யவேண்டும்; தாயானவள் தன் குழந்தைக்குப் புத்திமதிகளைப் போதித்து ஆரம்பத்தில் கொஞ்சம் படிப்பும் சொல்லிக்கொடுக்கும்படியான சக்தியுள்ளவளாகவாவது அல்லது பள்ளிக்கூடத்தில் படித்துவரும் பாடங்களை வீட்டில் மேல்பார்வை பார்த்துக்கொள்ளத்தக்கவளாகவாவது இருக்கவேண்டும்; வீட்டுவேலைகளைக் குறைவில்லாமல் கவனித்து இல்வாழ்க்கையைக் கூடியவரையில் இன்பமாகச் செய்யும் சாமர்த்தியமும் நமது பெண்களுக்கு இருக்கவேண்டும். பெண்கல்வியினால் இவ்வளவு பிரயோசனத்தைமாத்திரம் அடையும்படியான பாக்கியம் பெறுவோமேயானால் அதுவே போதும்; லீலாவதிபோன்ற பாவலராகிப் பெண்கள் அற்புதமாய்த்தோன்றிப் பிரகாசிக்கும்படி நாம் முயற்சிசெய்வது அவசியமன்று.

(இன்னும் வரும்.)

உண்மைதவறாத உத்தமனான ஒரு ராஜன் கதை.

இவ்வுலகம் பண்ணிய புண்ணியத்தால், சூரியகுலத்தின் இருபத்தினான்காவது தலைமுறையில் வந்துதித்த பெருங்கொடைவள்ளலாகிய அரிச்சந்திர மகாராஜாவானவன் மூன்றுலகுமோங்கு புகழ்பெற்று, ஆதிமாநகரமாகிய அயோத்திமாநகரில் மநுநெறிமுறை அணுவளவேனும் பிறழாது தர்ம ராஜ்யபரிபாலனஞ் செய்துவரும்காலத்தில், அவனது குலகுருவாகிய வசிஷ்டமாமுனிவர் அவனுக்கு வரப்போகிற பொல்லாங்குகளை அப்பொழுதுண்டான மகோற்பாதங்களினாலறிந்து, அவையனைத்தும் இனிது சழியு

மாறு பற்பலவாகிய சாந்திகளை வேதோக்தமாகச் செய்துகொண்டிருந்தார். ஒருநாள் அரிச்சந்திரன் தனது குலகுருவின் நியமனத்தால் இரவெல்லாம் விழித்திருந்து விதூஷகனேடுகூட அந்தப்புரத்துக்கு வருகையில், போதாயனன், வேந்தே! விழித்திருந்ததினல் கண்சுழன்று, சற்று வெளியே தலையைக்காட்டுகிற ஆமையைப்போலக் கண்ணைக் கொட்டிக்கொட்டி விழித்துக்கொண்டும் குருட்டெலிபோல வழிதெரியாது தட்டித்தள்ளாடி நடந்துகொண்டும் வருகிறீரே என, ராஜன், மித்திரா! நித்திரையானது, உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது; சித்தத்தைச் சுத்தப்படுத்துகின்றது; அங்கங்கள்தோறும் ஒளிபெறச்செய்கின்றது; தோஷங்களைப் போக்குகின்றது; வாதபித்தசிலேஷ்மங்களாகிய தாதுக்களைத் தத்தம் நிலையில் நிறுத்துகின்றது; யோகவித்தையினுல் பெறத்தக்க ஆநந்தத்தை அளிக்கின்றது. உறக்கமின்மையோவென்றால், இதோ என்னைப்பார்; எனக்குத் தூக்கமின்மையால் சோம்பல் முறிப்புண்டாகிறது; மனம்வருந்தி அயர்வு உண்டாகின்றது;அடிக்கடி கோட்டாவிவிட்டவண்ணமாயிருக்கிறேன்; இளம்வெயிலையுங் காணக் கண் கூசுகின்றது; இவ்வாறு கண்விழித்திருக்கும்படி குலகுருவானவர் யாது காரணம்பற்றி ஆக்கியாபித்திருக்கிருரோ அறிகிலேன்; ஆயினும் குருவின் கட்டளைகள் எதிர்பேசாது புரியத்தக்கவை என்ருன்.

இவ்வாறு சொல்லக்கேட்ட போதாயனன், ஐயா! உமது வரவை எதிர்பார்த்திருக்கின்ற தேவி சந்திரமதி, நீர் வாராமையைப்பற்றி என்னைக் கடிந்துகொள்வாளேயென்று விசாரப்படுகிறேன் என, அரசன், தோழா போதாயனு! நீ என்னைப் பரிகாசம்பண்ணினது போதும் என்று சொல்ல, அவன் அரசனே! உமக்குப் பரிகாசமாகத் தோற்றுகிறது; பிர்ம்மசாரியான எனக்கோ முற்றும் அனர்த்தமாகவே முடியுமெனத் தோன்றுகிறதென்ருன். அரிச்சந்திரன் போதாயனனேடு இவ்வாறு பேசிக்கொண்டே அந்தப்புரத்தை நோக்கிச்செல்லுகையில், சாருமதியென்னும் சேடியோடுகூட அலங்காரப் பொருள்களை வைத்துக்கொண்டு சந்திரமதிதேவி எதிரே நிற்பதைக் கண்ணுற்று, அவர்கள் சொல்வதையும் செய்வதையுங் கண்டு கேட்டறியும் அவாவினனாய், அவர்களை அணுகிச்செல்லாமல் சற்று தூரத்திற்கப்பால் ஒளிந்திருந்து பார்த்தவண்ணமாய் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான்.

சந்திரமதியோவெனின் பிரிவாற்ருமையினுல் வெந்துயருற்றுப் பெருமூச்செறிந்து எனக்கு அணியும்வேண்டாம்; அலங்காரமும் வேண்டாம், நான் எனது நாயகனுக்கு நல்லவளாயினலன்ரே இவை எனக்கு வேண்டுமென, அருகேநின்ற சாருமதி, நீ துக்கப்படுகிறது போதும்; அரசர் பலரைப் பெண்டுகொள்பவரன்ருேவென்ருள். இம்மாற்றம் போதாயனனது செவியிற்புகவே அவன் சினங்கொண்டு, என்னடி! சேடிபுத்தியினுல் அரசனை நிந்தித்து அவன்மேற் பெரியமொழி கூறுகின்ருய் என்ருன். அதற்கு அரிச்சந்திரன், அப்பா, போதாயனு! உனக்கித்தனை கோபமேன்? தன்னியரான புருஷர்களுடைய பிராணநாயகியினது ஊடலானது மர்ம்மமறிந்த தோழியரால் இப்படித்தான் விர்த்திசெய்யப்படுமென்ருன். சந்திரமதியானவள் உயிர்த்துணையாகிய தனது நாயகனைக் காணுது கண்ணீருகுப்பதைக் கண்ணுற்ற சாருமதி அவளைநோக்கி: எம்பெருமாட்டி! மனதைத் தேற்றிக்கொள்; உனது நாயகர் நீ அவர்மீதுகொண்ட காதல்மிகுதியின் வரம்பைக் கடந்துவிட்டார்; ஆதலினுல் நீ என்னைக் கேட்பாயாயின், இனி அவர் காதலோடு உன்னை நோக்கிவருங்கால் நீ அந்நோக்கத்திற்

கெதிர்நோக்காதிருத்தல்வேண்டும்; அன்றியும் நீ ஏதோ ஒன்றின்மேற் கருத்தாயிருப்பவள்போல அவரோடு உரையாடாதிருத்தல்வேண்டும் என, சந்திரமதி: தோழி! நீ சொன்னவண்ணஞ் செய்யவேண்டுமென்றால், இக்கொடிய நெஞ்சிற்கு அவரைக் காணவிடத்து நோவேயன்றிக் கண்டாற் கொண்டாட்டமாகின்றதே! என்செய்வேன் என்றாள்.

ஒளிந்திருந்து இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அரிச்சந்திரன் சந்திரமதி தேவியண்டை விரைந்தோடிப்போய் நிற்கவே அவள் கொண்டிருந்த சீற்றமனைத்தும் அக்கணமே மாறினவளாகி அவனைப் புகழ்ந்து கொண்டாடினாள். அரசனைக் காணாதவிடத்து அவனை நிந்தித்துப் பேசிய சேடியாகிய சாருமதி அவனைக் கண்டதுந் தணுக்குற்று, அவன் வீற்றிருப்பதற்காக ஆசனமிட்டாள். அதன்பின்பு எல்லோரும் அங்கே வீற்றிருந்தார்கள். அரசன், சந்திரமதியின் நினைப்பென்னுங் காற்றசைய அவள் நெஞ்சிடையே மூளுங்கனற்புகைய வேகின்ற காரணத்தை அவளது முகக்குறியாலறிந்து: மெல்லியலாய்! நீ அணியின்றியிருக்கிறாயெனினும், உனக்கு இதுவும் ஓர் அழகாகவேயிருக்கின்றது; ஆயினும் நீ இவ்வாறிருத்தலானது உள்ளே மறைந்திருக்கிற சீற்றத்தை வெளியிடுகின்றதென, அவள் அரசனைப்பார்த்துச் சினந்து, ஆரியபுத்திரர் தூக்கக்கலக்கங்கொண்டு, கண் சுழன்று, விழிசிவந்திருப்பது வெகு அழகாயிருக்கிறதென்று காய்ந்து பேசினாள். அத்தகைத்ததேவியாரை அரசன் கண்டு கண்குளிர்ந்து அவளைப் பலவாறாகப் புகழ்ந்து; பெண்கள்நாயகமே! என்மீதருள்புரிவாயாக; காரணமின்றிக்கொண்ட கோபமென்னே? நீ நினைத்திருக்குமாறு யான் குற்றஞ்செய்தேனல்லேன்; நீ உனக்குத் தோற்றியவாறு என்னைக் கண்டித்துத் தண்டிக்கலாம்; நான் செய்ததனைத்தையும் குலபதியாகிய வசிஷ்டபகவானே நேர்நின்று பார்த்திருக்கிறார் என்றான்.

இவ்வாறு அரிச்சந்திரன் சொல்லி வாய்மூடுவதற்குள்ளே, அந்தப்புரத்தின் வாசற்காப்பவளாகிய ஹேமப்பிரபை என்பவள் அரசனிடம் வந்து: வேந்தே! வெற்றியடைவீராக; குலபதியினிடமிருந்து வந்த தாபஸர் தலைவாசலிற் காத்திருக்கிறாரென, அரசன், ஹேமப்பிரபே! அவரை ஆர்வமுடன் உள்ளே அழைத்துவா என்றான். அம்மாதவத்தவர் சாந்தியுதகத்தை யெடுத்துக்கொண்டு வரும்போது வழியிலுண்டான துர்நிமித்தங்களைக் கண்டு: ஓகோ! இதென்ன அற்புதம்! பௌர்ணிமையின்றிச் சந்திரகிரகணமுண்டாகிறது; திக்குக்களெங்கேபார்த்தாலும் அகோரமாய்த் தீப்பற்றியெரிகிறது; பூமி கிடுகிடென்று நடுங்குகின்றது; கொள்ளிக்கட்டைகள் சூரியமண்டலத்தைக் குத்துகின்றன; இவ்வாறு உண்டாகின்ற மகோற்பாதங்களின் தீமை என்னென்று முடியுமோ தெரியவில்லையே! நமது குலகுருவினால் உய்த்துணரப்பட்டிருக்கின்றபடியே இவை அனைத்தும் இறுதியில் சூரியனுக்கு முற்பட்டபனிபோலவே விலகவேண்டும்; சாந்திமுதலாகப் பண்ணும் புண்ணியச்செயல்களுள் ஒன்றேனும் பழுபடாது பலிக்கும்; அதற்காகவே, தாம் செய்யத்துவக்கிய மங்களக்கிரியைகளின் சேஷமாய், உற்பாதங்களின் கொடுமையைத் தணிப்பதற்குத் தண்டாயுதமான இந்தச் சாந்திஉதகத்தை அரிச்சந்திரமகாராஜாவுக்கும், அவரது பட்டமகிஷியாகிய சந்திரமதிதேவியாருக்குங் கொண்டுபோய்க் கொடுக்கும்படி வசிஷ்டபகவான் நியமித்திருக்கிறார் என்றிப்படி சித்தித்துக்கொண்டிருந்தார்.

வாசற்காப்பவளால் அந்தப்புரத்துக்குள்ளே அழைத்துக்கொண்டுவரப்

பட்ட அத்தவசியை அரசன் கண்டு, ஆசனத்தினின்றுமெழுந்து எதிர் சென்று அவரைத் தண்டனிட, சந்திரமதிதேவி அவரது சீர்பாதகமலங்களைத் தொழுதுநின்றாள். அத்துறவி அரசனைநோக்கி, அரசரே! வெற்றிபெறு வீராகவென்றும், அருகேநின்ற சந்திரமதியைநோக்கி, அம்மா! அதிசூரனுன மக்கட்பேறடைவாயாகவென்றும் வாழ்த்தினர். அதன்பின்னர் அத்துறவி அரசனால் இடப்பட்ட ஆசனத்தின்மீதெழுந்தருளி, வேந்தர்பெருமானே நிசியெல்லாம் விழித்திருந்து இப்போது தேவியாருடனிருக்கிற உமக்கு அபிஷேகஞ்செய்தற்பொருட்டு, வசிஷ்டப்பிர்ம்மரிஷியினது ஆசீர்வாத மகிமைபெற்றதும், வேதோக்தமாய் அபிமந்திரணம் செய்யப்பட்டதுமான இந்தச் சாந்திஉதகத்தை அவர் உம்மிடங் கொடுத்துவிட்டுவரும்படி ஆக்கியா பித்திருக்கிறாராதலால் நீர் இதை ஏற்றுக்கொள்ளுமென்று அதை அவனிடங் கொடுக்க, அரசன், இது மகத்தான அனுக்கிரகமென்று உவந்து வாங்கிக் கொண்டு அவர்க்கு அஞ்சலிசெய்ய, தாபஸர்: போர்வேந்தே! உமக்கு உறும் இடரனைத்தையும் போக்குதற்காகவும், க்ஷத்திரியர்க்குரிய பிரபாவத்தை வளர்த்தற்பொருட்டும், பாவத்தைத் தீர்க்குமந்திரங்களாற் புனிதமானதும், நன்மையைத் தருகின்ற சிறப்பினையுடையதும், கிரியாசேஷமானதுமான இந்தப் புண்ணியோதகமானது உமது ஐசுவரியத்தின் பொருட்டாகட்டும்; எவ்வகைத்தாய ஆபத்தையும் போக்க வல்லதாகட்டும்; உமக்கு அகமகிழ்ச் சியையும் அளிப்பதாக என்று சொல்லி சாந்திநீரால் அந்தத் தம்பதிகளுக்கு அபிஷேசனஞ்செய்வித்தார்.

அதனால் அரிச்சந்திரன் பேரானந்தம்கொண்டு, இத்தன்மைத்தாய அபி ஷேசனத்தினருளால் இரவிகுலத்தரசர்களெல்லாரும் பெரும்பேறு பெற்ற னரன்றோ? ஆதலினால் இந்த அபிஷேகமானது, நான் புத்திரபாக்கியத் தைப் பெறுதற்கு ஏற்ற விதைவிதைத்ததுபோலாகின்றதென்று எண்ணி னன். அந்தத் தபோதனர் தேவியைநோக்கி: பகவதி! குலபதியான வசிஷ்டபகவானிட்ட கட்டளைப்படியே நீ நவக்கிரகதேவதைகளையும் மறையவர்களையும் பூஜிப்பதற்கு ஆரம்பிக்கவேண்டுமென, அவள் அம்மகா முனிவர்க்கு அஞ்சலிசெய்து, ஆண்டவனே, நியமித்தவண்ணமே செய்யப் புகுகிறேன் என்றாள். அதன்பின்பு அத்துறவி அரசனைநோக்கி: அரசே! உமக்கு மங்களமுண்டாகுக; நான் குலபதியின் சந்நிதானத்திற்குப் போக வேண்டுமென்று விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார். சந்திரமதிதேவி சற்றுமுன்னே தன் கணவனைக் காரணமின்றிப் பின்போன நெஞ்சாற் கடிந்துகொண்டதற்காக மனம்வருந்தி வெட்கமுற்று அவனது சீற்றத்தை மாற்றுமாறு, ஆரியபுத்திரரே! நான் செய்த பிழையனைத்தையும் பொறுத்துக் கொண்டு என்மீது அருள்புரியவேண்டுமெனவே, அம்மன்னவர்கோமா னுக்கு அவளிடத்துக் காதல்மிகுந்து இளங்கொடியே! நீ என்மீது மனங்கு ளிர்ந்திருப்பது மெய்யாயின், இந்த முத்துமாலையை உன் கழுத்திலிடுகி றேன், பொறுத்துக்கொள்ளவேண்டுமென்று அம்மாலையை அவளது கழுத் திலிட்டான். இந்த உபசாரத்தைக்கண்டு சந்திரமதி வெட்கமுற்று: ஆரிய புத்திரரே! குலபதி ஏவிய கருமத்தைத் தலைமேற்கொண்டு புரியவேண்டுமா தலால், நான் போய்வருகிறேனென்று வேந்தனிடம் விடைபெற்றுக் கொண்டு போயினள். (இன்னும் வரும்.)

நியாயாதிபதியாகிய இன்னிஸ் துரையவர்களுக்குச் சொன்ன சுபவசனம்.

இச்சென்னைமாநகரில் ஹைகோர்ட்டு என்று பிரசித்திபெற்று விளங்காநின்ற நியாயஸபையில் பதினெட்டு வருஷகாலமாய் நியாயாதிபதியாயிருந்து தமது அதிகாரத்தை நீதிமுறைப்படியே நன்ருக நிர்வகித்து தருமப்பிரபுவென்று யாவராலும் கொண்டாடப்பட்டிருக்கின்ற இன்னிஸ் துரையவர்கள் தேகசவுக்கியத்துக்காகச் சுதேசம் போகக்கருதி நாளது மேமீ தமது அதிகாரத்தைவிட்டு நீங்குகிருர். சுதேசம்போய் இவர் மறுபடியும் திரும்பி இத்தேசத்துக்கு வருவது நிச்சயமில்லையெனத் தெரிந்து இத்தேசத்துக் கனவான்கள் சிலர் அவர்விஷயத்தில் தமக்குள்ள நன்றியை வெளியிடும்பொருட்டு, பச்சையப்பமுதலியார் அவர்களுடைய சபாமண்டபம் முதலான இரண்டோரிடங்களில் அவரை வரவழைத்துத் தக்கபடி விநோதமாக விருந்துமுதலிய மரியாதைகள் செய்வித்தனர்.

கடைசியாய் அந்த நியாயாதிபதி நாளது மேமீ 5௳ மாலையில் நியாயஸபையைவிட்டு எழுந்திருக்கும்போது, அட்வகேட் ஜனரலாகிய ஆனரெபில் ஸலிவன் துரையவர்கள் அவர்க்குச் சுபவசனமாக இரண்டொரு மொழிகள் மொழிந்தார். அதன் கருத்தாவது:—

ஓ! எமது தருமப் பிரபுவே, தாங்கள் இந்த நியாயாதிகாரபதத்தைவிட்டு நீங்குகிற இத்தருணத்தில் தங்கள் மேலான கனத்தைச் சுட்டி இரண்டொரு மொழிகள் எடுத்துரைக்க ஆவல்கொண்டிருக்கிறேன். தாங்கள் இந்த நியாயாதிகாரபதவியை ஏற்றுக்கொண்டு பதினெட்டு வருஷங்களுக்குமேலாகின்றது. இந்த நியாயசபை இப்போதிருக்கின்ற ஏற்பாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலேயே தாங்கள் இதற்கு அதிபதியாக நியமிக்கப்பட்டு, அன்றுமுதல் இன்றுவரை வெகு திறமையாக இவ்வதிகாரத்தை நிர்வகித்து, நியாயாதிகாரத்தை நடத்துவதில் மிகச்சிறந்த ஸாமர்த்தியமும் நுட்பபுத்தியும் உடையவரெனப் பிரசித்திபெற்றிருக்கிறீர்கள். தாங்கள் இந்த நியாயபதத்தை நிர்வகித்தகாலத்திலே தங்களிடத்தில் தோன்றிய திறமைகளையும் குணாதிசயங்களையும் பார்க்கிலும் அதிகமான குணங்களை விளங்கக் காட்டிய நியாயாதிபதிகளேயில்லையென நான் சொல்லத் துணிகிறேன். இப்போது பிரசித்தர்களாயிருக்கின்ற பலர் இவ்வுலக வியாபாரத்தில் புகுவதற்குமுன்னமே தாங்கள் அதிகாரபதத்தில் நியமிக்கப்பட்டீர்கள். தாங்கள் நியாயவிசாரணையில் மிகுந்த அனுபவமும், நியாயாநியாயங்களை நுட்பமாய்ப் பகுத்தறியும் திறமையும், தருமபக்ஷபாதமும், இந்தச் சபையாருடைய விசாரணைக்குவந்த ஒவ்வொரு வியவஹாரத்திலும் நியாயமே செய்யவேண்டுமென்ற உண்மையான அபிமானமும் உடையவரெனச் செய்கையில் நிதர்

சனமாக நடத்திக் காட்டினீர்கள். எங்கள் விஷயத்திலோ என்றும் ஒரேமாதிரியாகவே வித்தியாஸமில்லாமல் தகுந்த மரியாதையும் அபிமானமும் உடையவர்களாயிருந்தீர்கள். அப்படிப்பட்ட பெருந்தன்மையுடையவர்களான தாங்கள் மிகுந்த மேன்மைபெற்றவர்களாகி நெடுநாள் வாழ்ந்திருக்கக்கடவீர்கள். தங்களைவிட்டுப் பிரிய மனமில்லாமலே இப்போது தங்களுக்கு விடைகொடுக்கலாகிறோம் என்றார்.

அவர்க்குப்பிறகு ராமாராவு அவர்கள் எடுத்துரைத்தது:

பிரபுக்களே, தாங்கள் இந்த அதிகாரபதத்தைவிட்டு நீங்கும்படி உத்தேசித்துக் கடைசியாய் இன்றையதினம் நியாயஸபையைவிட்டு எழுந்திருக்கும்போது, இந்த நியாயஸபையின் வக்கீல்களுக்குத் தங்களிடத்தில் உண்டாயிருக்கும் நன்குமதிப்பை வெளியிடும்படியான காரியம் என்னைப் பொறுத்ததாயிருக்கின்றது. இந்தப் பொருமைகிடைத்தது எனக்கு ஒரு மேன்மையேயாயினும், தங்களுக்கு விடைகொடுக்க வேண்டியதாகிறதே யென்பதை நோக்கி மனவருத்தமுண்டாகிறது. தங்களிடத்தில் எங்களுக்குள்ள ஆழ்ந்த உள்ளன்பு இப்படிப்பட்டதென்று சொற்களால் வெளியிடக்கூடாத ஒருவகை மனவெழுச்சி இப்போது என் மனதில் உண்டாகிறது. இத்தேசத்தில் பலவித முக்கியமான மாறுபாடுகளெல்லாம் உண்டாவதற்குமுன்னமே 1844-ஞ தாங்கள் இத்தேசத்திற்குவந்து சேர்ந்ததையும், அப்படிப்பட்ட ஆபத்து நேர்ந்தகாலங்களிலும் தலைமையாயிருந்து நன்மைக்காகவே பாடுபட்டு வந்ததையும் யோசித்து, அப்படிப்பட்ட யோக்கியதாபக்ஷபாதியான நன்னேசனைவிட்டுப் பிரியும்படி நேரிட்டிருப்பதை நினைக்கும்போது, தங்களிடத்தில் எங்களுக்குள்ள மரியாதையும் நன்றியறிதலும் இத்தன்மையதென்று எடுத்துரைக்க ஒன்றும் தோன்றாமல் ஊமையாயிருக்கிறோம். இப்போது இவ்விந்தியாவிலுள்ள நியாயாதிகாரிகளுள் முற்பட்ட நியாயாதிகாரி தாங்களே. தாங்கள் இந்த ராஜதானியில் இவ்வதிகாரபதத்தை 18-வருஷகாலமாக நடத்திவருகிறீர்கள். இவ்வளவு நெடுங்காலம் ஒரு அதிகாரபதத்தை நீதிநெறிதவறாமல் நுட்பபுத்தியோடு நிர்வகித்து வந்ததனாலாகிய பெருமை உங்களொருவர்க்கன்றி மற்றெவர்க்கும் கிடைத்ததில்லை. தாங்கள் ஏற்றுக்கொண்ட இந்தப் பெரிய அதிகாரத்தை நிர்வகித்துவந்த உத்தமமான ஒழுங்குபாடுகளையெடுத்து உரைப்பது இப்போது அவசியமன்றாயினும், தாங்கள் நியாயவிசாரணை விஷயத்தில் மிகுந்த ஊக்கமும் பொறுமையுமுடையவராகி எப்படிப்பட்ட வியவகாரங்களையும் கிரமமாக விசாரணைசெய்து நியாயத்தைக் கண்டுபிடித்து அதற்கேற்றபடி தீர்மானம் செய்வதிலேயே மிகுந்த அபேக்ஷையுடையவரென்பதைப்பற்றி இத்தேசத்து ஜனங்கள் கொண்டிருக்கிற கொண்டாட்டத்தை எடுத்துரையாமல் இத்தருணத்தில் சும்மா

இருக்க மனது உடன்படவில்லை. தாங்கள் இவ்வதிகாரத்தைச் செலுத்திவந்தகாலம் முழுதும் எங்களிடத்தில் ஒரேமாதிரியாய் என்னும் மாறாத அபிமானமும் மரியாதையும் உடையவர்களாயிருந்தீர்கள். நியாயாதிபதிக்குவேண்டிய உத்தமகுணங்களுக்கெல்லாம் உங்களையே ஏற்றநிதர்சனமாக நாங்கள் கண்டிருக்கிறோம். இவ்வளவுகாலமாக தாங்கள் மிகுந்த உள்ளன்புடன் எங்களைப் பரிபாலித்துவந்த கடனை நாங்கள் எவ்வாறு தீர்த்துக்கொள்வோமோ தெரியவில்லை. தங்களுக்கு உண்மையினிடத்திலுள்ள அபிமானமும் கடமையைக் கைவிடாதிருப்பதிலுள்ள கருத்துமாகிய இவைகளாலேயே இத்தேசத்தினிடத்திலும் இத்தேசத்துப் பிரஜைகளிடத்திலும் தங்களுக்கு மிகுந்த விசுவாஸமுண்டாயிருக்கிறதென்பதும், எங்களிடத்தில் எவ்வளவு குற்றமிருந்தாலும் அதைக் கருதாமல், அந்த விசுவாஸத்தை எப்போதும் பாராட்டிவந்தீர்களென்பதையும் உங்களுடன் க்ஷணகாலம் ஸகவாஸம்பண்ணவர்கள்கூடத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளுவார்களென்றால் அதை நான் எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ?

இவ்வளவு காலமாய்த் தாங்கள் மிகவும் பிரயாஸமான இந்த அதிகாரத்தை நிர்வகித்து இப்போது சுதேசம்போய்ச் சவுக்கியமாயிருக்கப்போகிறீர்களென்பதை யோசிக்கையில் எங்களுக்குப் பரமஸந்தோஷமேயாயினும், தங்களைவிட்டுப் பிரியவேண்டுமேயென்ற துயரம்மாத்திரம் மனதை மிகவும் வருத்துகின்றது. ஆயினும், தங்கள் வாழ்நாளை லோகோபகாரமான நல்வழியில் வெகுநேர்மையாகக் கழித்தீர்கள். இனிமேல் அதைவிட்டொழிந்து சிலகாலம் சவுக்கியமாய் இளைப்பாறி இருக்கவேண்டுவது நியாயமே. தங்கள் வசத்தில் மகாராணியார் ஒப்புவித்த மேலான அதிகாரத்தை பக்திசிரத்தையோடு நிர்வகித்து இத்தேசத்துப் பிரஜைகள் விஷயத்திலும் தருமத்தைப் பரிபாலித்துவந்ததற்காகத் தங்கள் மனம் மிகவும் திருப்தியடைந்திருக்கிறது. இப்போது தாங்கள் இத்தேசத்தைவிட்டுப் போம்போது இவ்விடத்துப் பிரஜைகளுடைய நேசமும், ஸ்வாமி உங்களை இன்னும் பலவருஷகாலம் சவுக்கியமாய் உயிரோடிருக்கும்படி கருணைபுரியவேண்டுமென்ற பிரார்த்தனையும் உங்களைப் பின்தொடர்ந்து வருகின்றன. இப்போது நான் கடைசியாய் உங்களை என்ன வேண்டிக்கொள்ளப்போகிறேன்? பாரதத்தில் ராஜசூயயாகம் முடிந்த பிறகு பாண்டவர்களுடைய பிராணசினேகிதரான கிருஷ்ணன் துவாரகைக்குப்போகப் புறப்படும்போது, "எங்களைவிட்டுப் போக வேண்டாமென்றால் அபசகுனம்போலாகிறது, சுகமாய்ப் போகலாமென்றால், விசுவாசத்துக்குக் கேடுசெய்வதுபோலாகிறது, சில நாள் நின்றுபோகலாமென்றால் கட்டளையிடுவதுபோலாகிறது, உங்கள்சித்தம் என்றால் ஏதோ மனவருத்தத்தோடு சொல்வதுபோலாகிறது; ஆதலால் நான் இத்தருணத்தில் என்னசொல்லமாட்டு

வேன்! ஓ கருணைக்கடலான யதுகுலதிலகனே, எங்களை எப்போதும் மறவாதிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று தரும புத்திரர் சொல்லியதை ஞாபகப்படுத்துவதுதவிர நான் சொல்ல வேண்டுவது மற்றொன்றுமில்லையென்றார்.

அதன்மேல் நியாயாதிபதியவர்கள் மொழிந்த மறுமொழியாவது:

சென்ற பதினெட்டுவருஷகாலமாய் இந்த அதிகாரஸ்தானத்திலிருந்து, இப்போது இந்த அதிகாரத்தைமாத்திரமேயன்றி, இங்கே என்னைச் சூழ்ந்துகொண்டிருக்கின்ற பற்பல நேசர்களையும், நாள் தோறும் என்னுடன் கலந்துபேசி என்னைப் பெருமைப்படுத்தி வந்த பின்னும் பலபேர்களையும் விட்டுப் பிரிந்துபோவதென்றால் எவர்க்குத்தான் மனவருத்தமுண்டாகாது? மேலும் இப்போது அட்வகேட் ஜனரல், ராமராவ் இவர்கள் எடுத்துரைத்த, எப்படிப் பட்டவர்களுக்கும் மனவுருக்கமுண்டாக்கத்தக்க பேச்சுகளைக் கேட்கும்போது, நான் இப்போது அடைவதற்கிருக்கின்ற நஷ்டத்தைப்பற்றி எனக்குப் பின்னும் அதிகமான மனத்துயரமுண்டாகிறது. ஆயினும் உங்களுடைய விசுவாஸமும் நல்லெண்ணமும் பெற்றிருப்பதைப் பார்க்கக் கொஞ்சம் தேறுதலுண்டாகிறது. இவைகளோடு விசேஷமாக நீங்கள் என்னை நன்குமதித்திருக்கிறீர்களெனவும் தெரியவருகிறது. ஆயினும் நீங்கள் இப்போது என்னிடத்தில் அபிமானத்தால் எடுத்துச்சொன்ன புகழ்ச்சியான பேச்சுகள் எனக்கு உரியவையல்ல; என்றாலும், இந்த ஸ்தானத்தில் இத்தனைகாலமாகச் செலுத்திவந்த அதிகாரத்தை ஏற்றபடியே நடத்திவந்ததாக யாவரும் அங்கீகரிப்பது அற்பமானதன்று. இப்போது இந்த வியாபாரத்திலிருந்து ஒழிந்து சுதேசம்போய்த் தேகசவுக்கியத்தை விருத்திசெய்துகொள்வதில் எனக்கு மிகுந்த சந்தோஷமேயாயினும், இத்தனைகாலமாகக் கூடிப்பழகிய உங்களை விட்டுப்பிரியும்படியாவதைப்பற்றிமாத்திரம் கிலேசமுண்டாகிறது. ஆயினும் சென்ற நாட்களை நினைத்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கக்கடவேன். அந்த நாட்களை நினைக்கும்போதெல்லாம் எனக்கு மனதில் ஒரு மேம்பாடான மதிப்பு உண்டாகின்றது. ஏனெனில், நான் செய்துவந்த அதிகாரத்தைக் கொண்டாடி நீங்கள் என்னைப் பெருமைப்படுத்திப் புகழ்ந்தது அந்தக்காலத்திலேயேயல்லவா? என்னிடத்தில் இவ்வளவு அன்பாய்ப்பேசி என்னை வாழ்த்தியதற்காக நான் உங்களிடத்தில் மிகவும் நன்றியுடையவனாகிறேன். இப்போது இந்த நன்னேசரைவிட்டுப் பிரிவதனாலாகிய துயரம் மனதில் ஒருபுறத்திலிருந்தாலும், நீங்கள் எனக்கு விடைகொடுத்தனுப்புவதற்காகச் சொல்லிய இந்த அன்பான பேச்சுகள் வாழ்நாள்முழுதும் எனக்குத் தற்புகழ்ச்சியும் சந்தோஷமும் உண்டாக்கத்தக்கவைகளாயிருக்கின்றன என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டார்.

சிறுவர்க்கானகதை.

(ஒரு விசித்திர பாடகன்.)

முற்காலத்தில் விஜயபுரமென்னும் பட்டணத்திலே கலியாண ராமனென்று ஒரு பாடகன் இருந்தான். அவன் தேசாந்தர யாத்திரைபோய் அங்கங்குள்ள அதிசயங்களையெல்லாம் பார்த்துவர வேண்டுமென விருப்பம்கொண்டு தன் ஊரைவிட்டுப் புறப்பட்டுப் போயினன். போகையில் வழியே ஒரு பெருங்காடு இருந்தது. அக்காட்டிலே செல்லும்போது அவன், "துணையோடல்லது தனி வழிபோகேல்" என்றபடி, இவ்விடங்களில் நாம் தனியே போவது தகுதியன்று, நமக்குவேண்டிய கூட்டாளிகளைத் தேடிக்கொள்ள வேண்டுமென்று நிச்சயித்து, தோளிலிருந்த தன் வீணையையெடுத்து அக்காட்டிலுள்ள மரங்களும் கேட்டு மனமுருகும்படி மதுரமாக வாசித்துக்கொண்டுபோனன். போகையில் வழியிலே ஒரு புதரிலிருந்து ஓநாய் ஒன்று வெளிப்பட்டு ஓடிவந்தது. அதைப் பார்த்துப் பாடகன், ஒகோ இதென்ன, ஓநாய் ஓடிவருகிறதே; நமக்கு ஓநாய் வேண்டுவதில்லையே என்று சிந்தித்துக்கொண்டிருக்க, அந்த ஓநாய் சரேலென்று அவனிடம் வந்து, ஓ பாடகரே, நீர் பாடுவது வெகு விநோதமாயிருக்கிறது; நானும் உங்களைப்போலப் பாடக் கற்றுக்கொள்ளலாமோ என்று கேட்டது.

அதற்குப் பாடகன், ஓ, வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளலாம். ஆனாலொன்று, நான் சொல்லுகிறபடியே கேட்டு நீ சரியாக நடந்துவரவேண்டும் என்று சொல்ல, அந்த மிருகம், அப்படியே நடக்கிறேன். உபாத்தியாயர்க்கு மாணக்கர் எவ்வாறு கீழ்ப்படியவேண்டுமோ அவ்வாறே நான் உங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறேன் என்று சொல்லிற்று. அதுகேட்டுப் பாடகன் அப்படியே ஆகட்டுமென்று அந்த மிருகத்தைத் தன்னோடுகூடவே அழைத்துக் கொண்டுபோனன்.

அங்கிருந்து சிறிதுதூரம் போகையில் வழியிலே பெரிய ஆலமரமொன்றிருந்தது. அம்மரத்தின் அடியில் பொந்து ஒன்று இருக்கக்கண்டு பாடகன், உனக்குப் பாடக்கற்க விருப்பமுண்டாயின், நீ இந்தப் பொந்தில் உன் கால்களை வைக்கவேண்டுமென்றான். மெய்தானென்று எண்ணி ஓநாய் தன் கால்களை அதற்குள் வைத்தது. வைத்தவுடனே கலியாணராமன் ஒரு கல்லையெடுத்து அது தன் காலை வாங்கக்கூடாதபடி நன்றாய் அந்தப் பொந்தை அடைத்துவிட்டு, நான் போய்த் திரும்பிவருகிறவரையில் நீ இங்கேயே காத்திருக்கவேண்டும் என்று சொல்லிப் போய்விட்டான்.

போகையில் அவன் மறுபடியும் இக்காட்டில் நமக்குக் காலமும் இடமும் தக்கபடி அமைந்திருக்கிறது; இப்படிப்பட்ட இடத்

தில் நாம் ஒன்றியாய்ப் போவது உசிதமன்று; யாராவது ஏற்ற துணையொருவன் இருக்கவேண்டுமென்று யோசித்து வீணைவாசித்துக்கொண்டே போனான். அந்த நாதத்தைக் கேட்டு ஒரு குள்ளநரி அவனிடம் ஓடிவந்தது. அதைப்பார்த்துப் பாடகன், என் இந்தக் குள்ளநரி ஓடிவருகின்றது? நமக்குக் குள்ளநரி வேண்டுவதில்லையே என்று எண்ணிக்கொண்டிருக்க, குள்ளநரி அவனிடம் வந்து, ஐயா, நீங்கள் பாடுவது வெகு நன்றாயிருக்கிறது, நானும் பாடக் கற்றுக் கொள்ளலாமோவென்று கேட்டது. அதற்குக் கலியாணராமன், அப்படியே கற்றுக்கொள்ளலாம். ஆனால் அதற்கு நீ நான் சொல்லுகிறபடியே கேட்டு நடக்கவேண்டும்; இல்லாவிட்டால் முடியாதென்றுசொல்ல, குள்ளநரி, ஆசிரியனுக்குச் சீஷன் எப்படி அடங்கவேண்டுமோ அவ்வண்ணமாக நான் தங்களுக்கு அடங்கியிருக்கிறேன் என்று சொல்லி அவனைப் பின்தொடர்ந்து போயிற்று. பாடகன் அந்தக் குள்ளநரியோடுகூட ஒரு கொடிவழியாய்த் திரும்பிப்போக, அவ்வழியில் புளியமரமொன்றிருக்கக்கண்டு, அதின் இரண்டு கிளைகளைத் தாழ்த்தி இரண்டையும் தன் இரண்டுகால்களால் மிதித்துக்கொண்டு, ஓ குள்ளநரியே, என்னிடத்தில் ஏதாவது கற்றுக்கொள்ளவேண்டுமென்று விருப்பமிருந்தால், இப்போது இங்கேவந்து நிற்கவேண்டுமென, அப்படியே அது அவனண்டைவந்து நின்றது. வந்தவுடனே அவன் அதின் வலதுமுன் காலை வலதுபுறத்துக் கிளையிலும் இடதுமுன்காலை இடதுபுறத்துக் கிளையிலும் சேர்த்து உறுதியாய்க் கட்டி இரண்டு கிளைகளையும் விட்டுவிட்டான். அந்தக்ஷணமே அக்கிளைகள் நரியைத் தூக்கிக்கொண்டு ஆகாயம்போய்ச் சேர்ந்தது. நரியும் உடல்நடுங்கி மனங்கலங்கி அம்மரத்துநுனியிலே போய் நின்றது. பிறகு பாடகன் அந்நரியைப்பார்த்து, நான் திரும்பிவருமளவும் நீ இங்கேயே காத்துக் கொண்டிரு என்று சொல்லிவிட்டு அப்புறம்போயினான்.

மறுபடியும் அவனுக்கு முன்போல ஒரு யோசனை உண்டாயிற்று. இக்காட்டில் நமக்குக் காலமும் இடமும் யதேஷ்டமாய் அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட சமயத்தில் துணை எவருமின்றித் தனியேபோவது துன்பத்துக்கிடமாகின்றது. எப்படியாவது ஒரு தோழனைத் துரிதத்தில் தேடிக்கொள்ளவேண்டுமென்று கருதி வீணையைக் கையிலெடுத்துக் கேட்போர்களுக்குக் கர்ணாமிர்தமாயிருக்கும்படி வாசித்துக்கொண்டுபோனான்.

மிகவும் மதுரமான அந்த வீணையின் நாதம் அக்காடுமுழுதும் பிரதித்தொனியுண்டாகும்படிப் பரவ, அதுகேட்டு அங்கிருந்த முயலொன்று அவனண்டைக்கோடிவந்தது. அம்முயலைப் பார்த்து அவன், ஓ! இதென்ன? நம்மண்டை வருவதெல்லாம் இப்படிப்பட்ட கொடிய காட்டுமிருகங்களாகவே இருக்கின்றனவே. நாம் இம்முயலைத் துணைக்கொண்டு செய்வதென்னவென்று யோசித்

துக்கொண்டிருக்க, முயல் அவனண்டைவந்து, உலகத்துக்கோர் அற்புதமான பாடகசிரோமணியே, உங்களுடைய பாட்டைக் கேட்க என் மனம் பூரிக்கின்றது; அருமையான இவ்வித்தையை நானும் கற்றுக்கொள்ளலாமாவென்று கேட்டது.

அதற்குக் கலியாணராமன், நான் சொல்லுகிறபடி கேட்டு நடப்பாயானால் இவ்வித்தையை வெகு சீக்கிரமே நன்றாகக் கற்றுக் கொள்ளலாமென்று சொல்ல, அச்சிறுமுயல், யஜமானனுக்கு ஊழியக்காரன் எவ்விதமாய் அடங்கி ஆட்படவேண்டுமோ அவ்விதமே நான் உங்களுக்கு ஆட்படச் சித்தமாயிருக்கிறேன் என்றது. அது கேட்டுப் பாடகன் அம்முயலைத் தன்னோடுகூடவே அழைத்துக் கொண்டுபோனான். அவன் போனமார்க்கத்திலே பெரிய மாமரமொன்றிருந்தது. அம்மாமரத்தைக் கண்டவுடனே அருகிலிருந்த பெரிய காட்டுக்கொடியொன்றைப் பிடுங்கி அதை அம்முயலின் கழுத்தில் கட்டி அக்கொடியின் மற்றொரு நுனியை மாத்தோடு சேர்த்துக் கட்டிவிட்டு, நீ இம்மரத்தைச் சுற்றி இருபதுதரம் எழும்பி ஓடவேண்டும் என்றான். அப்படியே அந்த முயல் சுற்றிச்சுற்றி ஓடிற்று. ஓடவே அந்தக் கொடி அம்மரத்தில் நன்றாய் அழுந்தச் சுற்றிக்கொள்ள, முயல் அப்புறம் இப்புறம் திரும்பக்கூடாமல் சிறைப்பட்டதுபோலாயிற்று. இருந்தவிடம் விட்டுச் சற்றே திரும்ப முயன்றால் அதின் கழுத்துக்கட்டுப் பின்னும் நன்றாய் இறுகுகிறதே யொழியச் சிறிதும் சவுக்கியம் உண்டாக வழியில்லை. ஓ! என் அருமைத்தோழனான முயலே, நான் குறித்தவிடம்போய்க் காரியம் முடித்துக்கொண்டு திரும்பிவருகிறவரையில் நீ இம்மரத்தடியிலேயே என் வரவை எதிர்பார்த்துக்கொண்டிரு என்று சொல்லிப் பாடகன் போய்விட்டான்.

இவர்கள் இப்படியிருக்கப் பாடகனால் முதலிலே சிறைபடுத் தப்பட்ட ஓநாயானது கொஞ்சநேரம் பாடகனுடைய வரவை எதிர் பார்த்திருந்தது. நெடுநேரமாகியும் அவன் வராமைகண்டு, அவன் தன்னை ஏமாற்றி மோசஞ்செய்து போய்விட்டானெனத் தெரிந்து, அவனிடத்தில் மிகுந்த கோபம்கொண்டு, எப்படியாவது அவனைக் கண்டுபிடித்துப் பழிதீர்க்கவேண்டுமென்று ஆக்கிரகம்கொண்டு தன் கால்களைக் கட்டிவைத்திருக்கின்ற பாறையைப் பின்னங்காலால் உதைத்து இழுத்தும் பல்லால் கடித்து இழுத்தும் இவ்விதமாகப் பலதடவை முயன்று, மெல்ல அந்தக் கல்லைப் பெயர்த்துத் தள்ளிக் கடைசியாய்க் காலை வெளியே வாங்கிக்கொண்டது.

இப்போது அது செய்யத்துணிந்ததென்ன தெரியுமா? எங்கேயிருந்தாலும் போய்ப் பிடித்து அந்தத் துரோகியைக் கொன்றுவிடவேண்டுமெனத் தீர்மானித்து அதிக ஆக்கிரகத்தோடு அவ்விடம்விட்டு அவன் போனவழியே பார்த்துக்கொண்டு ஓடிற்று. ஓநாய் அப்படி மிகுந்த ஆவேசத்துடன் ஓடுவதைப்பார்த்து, நடுவழியே மாத்து

நுனியில் ஊசலாடிக்கொண்டிருந்த குள்ளநரி, மாமா, எங்கே போகிறீர்கள்; இந்தச் சிறையிலிருந்து என்னைச் சற்று விடுவித்துப்போங்கள்; இங்கே மரத்துநுனியில் நான் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறேன்; கேடுகெட்ட பாடகனொருவன் என்னை ஏமாற்றிவிட்டு எங்கேயோ ஓடிப்போனான் என்று சொல்லிக் கூவிற்று.

அதைக்கேட்டு ஓநாய், நேசனே, என்ன? பாடகனா உன்னை இப்படி மரத்துநுனியில் கட்டிவிட்டான்? ஆயின் அவன் பரமசண்டாளனேயொழிய வேறன்று; இப்படித்தான் என்னையும் அவன் ஒரு மரப்பொந்தில் அடைத்துவிட்டு ஓடிப்போனான். பிறகு நான் வெகுநேரம் வருந்தி மெல்ல விடுவித்துக்கொண்டு அவனைக் கண்டுபிடிக்க ஓடுகிறேன் என்று சொல்லி, அம்மரக்கிளையை வாயினால் பிடித்து இழுத்துத் தாழ்த்தி, நரியின் காலில் கட்டியிருந்த கயிறுகளைப் பல்லால் கடித்து அறுத்து அதை விடுவித்தது. அந்த நரியும் அப்பாடகனைப் பிடித்துத் தண்டிக்கவேண்டுமென்று ஓநாயோடு போயிற்று.

இவ்விரண்டுமாய்ப் போகையிலே, நடுப்பாதையில் ஒரு மரத்தடியிலே கட்டுண்டுநின்ற முயல் இம்மிருகங்களைக் கூவி, நேசர்களே, என்னை ஒரு கொடிய பாடகன் மோசஞ்செய்து இம்மரத்தடியில் கட்டிவிட்டுப் போயினான்; என்னைச் சற்றே அவிழ்த்துவிடுங்கள் என்று வேண்டிக்கொள்ள, அவைகளும் அதினிடத்தில் இரக்கமுற்று அதை விடுவித்தன. அங்கிருந்து அம்மூன்று மிருகங்களுமாய் அந்தப் பகையாளியைத் தேடிக்கொண்டுபோயின.

இந்நேரம் அந்தப் பாடகனும் சும்மாயிருக்கவில்லை; அந்தக் காட்டில் நல்ல துணையொருவன் தனக்குக் கிடைக்கவேண்டுமென்று மறுபடியும் தன் வீணையை வாசித்துக்கொண்டுபோனான். இந்தத் தடவைதான் அவனெண்ணம் நிறைவேறும்படியாயிற்று. சிறிது தூரம் போகையில் அக்காட்டிலே கட்டைவெட்டிக்கொண்டிருந்த வில்லியொருவன் மதுரமான அவ்வொலியைக் கேட்டு, மிகவும் மனம் பூரித்துக் கைவேலையை விட்டுக் கத்தியும் கோடாரியுமாய்க் கையில் எடுத்துக்கொண்டு பாடகனண்டை ஓடிவந்தான்.

அவனைப் பார்த்து, ஆ, இவன்தான் நமக்கேற்ற துணை. நான் மனிதனைத் தேடினேனேயல்லது மிருகங்களைத் தேடவில்லை. இப்போது நான் இவனைக் கண்டு சந்தோஷமடைந்தேன் என்று சொல்லி, அக்காட்டுமனிதன் கேட்டு மனமுருகி எல்லாத் தொழிலையும் விட்டுத் தன்வசமாகும்படி விநோதமாய்ப் பாடினான். அதைக்கேட்டு அந்த மனிதனும் ஒரு மாயையினால் மயக்கப்பட்டவன்போல வேறு நினைப்பின்றி அதேசிந்தையாய்க் கேட்டுக்கொண்டிருந்தான்.

இவர்கள் இப்படியிருக்கையில், பாடகனைத் தேடிக்கொண்டு வந்த ஓநாய், நரி, முயல் ஆகிய மூன்றுமிருகங்களும் பலவிடங்களிலும் தேடிக் கடைசியாய் இவர்கள் இருக்குமிடத்திற்கு அருகே வந்து சேர்ந்தன. அவைகளைப் பார்த்தவுடனே பாடகன், அவை

ஏதோ கொடிய எண்ணங்கொண்டு வந்தனவெனத் தெரிந்து, கோடாரியும் கையுமாய் அவைகட்கு எதிராக நிற்கவேண்டுமெனத் தன் துணைவனுக்குத் திட்டம்செய்தான். அப்படியே அவன் மிகப் பயங்கரமாய்ப் பார்த்துக்கொண்டு ஆயுதபாணியாய் அவைகட்கு எதிர்முகமாக நின்றான். அவனையும் அவனுடைய ஆயுதங்களையும் பார்த்ததும் அத்துஷ்டமிருகங்கள் நடுநடுங்கி, நாம் இங்கேயே திரும்பிவிட்டால் உயிராவது தப்பும். இவர்களண்டைபோனால் உயிரையும் இழக்கவேண்டுவதாகும் என்று சொல்லிக்கொண்டு, மறுபடி அவ்வழியைப் பாராமல் மூலைக்கொன்றாய் ஓடிப்போயின.

பாடகனும் தனக்கு ஆபத்தில் கைகொடுக்கவல்ல கூட்டாளியான அம்மனிதனைக் கூடவே கூட்டிக்கொண்டு சுகமாய்த் தான் கருதியவிடம்போய்ச் சேர்ந்தான்.

சமாசாரம்.

நார்த்துப்ரூக் ஸல்லாபஸபையில் கிரகப்பிரவேசம் செய்தபோது இளவரசர் ஒரு உபந்நியாஸம்செய்ததாக இச்சஞ்சிகையின் முதலில் எழுதியிருக்கிறோமே. அந்த உபந்நியாஸமாவது:—"ஸபிகர்களே, இப்போது நான் எடுத்துரைக்கப்போகிற விஷயம் முக்கியமாய் இந்தியாவிலிருந்து வந்திருக்கின்ற கனவான்களை நோக்கியே. நான் இந்துதேசயாத்திரைபோனபோது, அத்தேசத்து ராஜாக்கள் மாத்திரமேயல்ல, சகலமான பிரஜைகளும் எனது நல்வரவைக்கண்டு மகிழ்ச்சிகொண்டு எனக்குச் செய்த மரியாதைகளை நான் மறந்துபோகவில்லை; இனியும் மறக்கும்படியிராது. மாட்சிமைதங்கிய மகாராணியாருடைய ராஜ்யமாகிய இந்துதேசத்தினிடத்தில் எனக்கு உண்டாகிய அபிமானம் என் வாழ்நாள்முழுதும் நீடித்திருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட இந்துதேசத்தார்க்கும் நமது நாட்டார்க்கும் ஒருவர்க்கொருவர் நெருங்கியநேசம் உண்டாகும்படியாகவும், உத்தியோகபரீக்ஷைகளுக்காக வருகிறவர்கள் இங்கே சுகமாய் வசிப்பதற்கு ஏற்றவிடமாகவும், தாங்கள் படிக்கவேண்டிய காலம்போக மற்றக் காலங்களில் விநோதமாய்ப் பேசிக் களித்திருப்பதற்குத் தகுந்த ஸ்தானமாகவும் இப்படிப்பட்ட ஸல்லாபசபையொன்று ஸ்தாபிக்கவேண்டியது மிகவும் அவசியமானது. இந்தக் காரியம் செம்மையாக ஈடேறுமென்பதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இதற்காக இந்தியாவிலிருந்து விசேஷமான திரவியஸகாயம் கிடைத்ததென்று நார்த்துப்ரூக் பிரபு அவர்கள் சொல்லக்கேட்டு நான் மிகுந்த சந்தோஷமுடையவனாகிறேன். இந்துதேசத்து ராஜாக்கள் இந்த ஸல்லாபசபையை ஸ்தாபிக்கும் விஷயத்தில் மிகுந்த உதாரபுத்தியோடு விசேஷமாகக் கையொப்பம்செய்து தமக்குள்ள ஆஸ்தையை வெளியிட்டிருப்பதைக் காண நான் ஆநந்தபூரிதனாகிறேன்" என்று எடுத்துரைத்து, பிறகு பாயோநகர் மகாராஜா அதற்காக லக்ஷம் ரூபாய் கையொப்பம் செய்தாரென்பதைக் குறிக்கின்ற ஒரு பத்திரிகையையும் எடுத்துப் படித்தனர்.

C. K. S. Press, Vepery, Madras, 1883.

112-A

ORANG-OUTANG.—வாலில்லாக் குரங்கு.